பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை (04.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 188

# தமிழினப் படுகொலையைக் கண்டித்து
# பிரிட்டனில் உண்ணாவிரதப் போராட்டம்!

## தயா இடைக்காடர் ஆரம்பித்தார்; தமிழ்ப்பெண்மணியும் இணைந்தார்




உண்ணாவிரத ஆரம்ப நிகழ்வில் தயா இடைக்காடர் (நடுவே நிற்பவர்)

லண்டன்,ஜூன்4

**தமிழினப்படுகொலைக்ளை இலங்கை அரசு நிறுத்தக் கோரி பிரிட்டிஷ் நாடாளுமன்றம் முன்பாக லண்டன் ஹரோ நகரசபை உறுப்பினர் தயா இடைக்காடர் 101 மணி நேர தொடர் உண்ணாவிரதத்தை லண்டன் நேரப்படி நேற்றுமுன் தினம் நண்பகல் 12 மணிக்கு ஆரம்பித்தார். தமிழ் பெண் மணி ஒருவரும் இந்த உண்ணாவிரதத்தில் நேற்று இணைந்து கொண் டார்.**

தமிழினப் படுகொலைகளை இலங்கை அரசு நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி புலம்பெயர்ந்த ஈழத்தமிழரும் பிரிட்டனின் ஹரோ நகரசபை உறுப்பினருமான தயா இடைக்காடர் 101 மணிநேர தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். பிரிட்டிஷ் நாடாளுமன்றம் முன்பாக லண்டன் நேரப்படி நேற்றுமுன்தினம் நண்பகல் 12மணிக்கு அவர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

அவருக்கு ஆதரவளிக்கும் வகையில் தமிழ்ப் பெண்மணி ஒருவரும் நேற்று உண்ணாவிரதத்தில் இணைந்து கொண்டார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும் லண்டனை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி வடிவேலு தவராணி என்பவரே அவரென்று இணையத் தளச் செய்தியொன்று தெரிவித்தது. இவர் ஐந்து பிள்ளைகளின் தாயாராவார் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

உண்ணாவிரதப் போராட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் ஆயிரக் கணக்கில் கூடி தமது ஆதரவைத் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)




போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள்

# பிரிட்டனில் உள்ள உரிமைகள் கூட தமிழருக்கு இலங்கையில் கிடையாது

## உண்ணாவிரதமிருக்கும் தயா இடைக்காடர் வேதனை

லண்டன், ஜூன்4

பிரிட்டனில் தமிழர்களுக்கு உள்ள உரிமை கூட இலங்கையில் கிடையாது.

இவ்வாறு வேதனை தெரிவித்தார் பிரிட்டனின் ஹரோ நகரசபை உறுப்பினரான தயா இடைக்காடர்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் முன்பாக கவனஈர்ப்பு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கும் முன்பாக அவர் உரையாற்றிய போதே இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழர்களினது ஒற்றுமையை வெளிப்படுத்த நாம் இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம். லண்டனில் தமிழர்களுக்கு இருக்கிற உரிமைகூட இலங்கையில் இல்லை என்பதை சுட்டிக்காட்டுகிறோம். வடக்கு-கிழக்கு மக்கள் முழு உரிமையுடன் வாழ வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டன் ஆதரிக்க வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம். அப்பாவி மக்களை குறிப்பாக பச்சிளம் குழந்தைகள் பெண்கள் படுகொலை செய்யப்படுவதை இலங்கை அரசாங்கம் நிறுத்தவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவில் பொங்குதமிழ்

வட்டக்கச்சி,ஜூன்4

'ஊர்கூடி பொங்குதமிழ்' நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு முல்லைத்தீவு வலைஞன்மடத்தில் நடைபெறவுள்ளது.

''இறுதி வெற்றிக்கு வழிவிட்டு விலகுக'' என்னும் தொனிப் பொருளில் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

அரங்க செயற்பாட்டுக் குழுவினரும் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகள்,

(12ஆம் பக்கம் பார்க்க)

# அரசு மற்றும் புலிகளின் குழுக்கள் இன்று ஒஸ்லோவுக்குப் பயணம்

கொழும்பு,ஜூன்4

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக நோர்வேத் தலைநர் ஒஸ்லோவில் எதிர்வரும் 8,9ஆம் திகதிகளில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளும் அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் குழுக்கள் இன்று நோர்வேக்குப் பயணமாகின்றன.

விடுதலைப் புலிகளின் குழு இன்று நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து விமானப் படையின் ஹெலிமூலம் கட்டுநாயக்கவை அடைந்து இன்றிரவு ஒஸ்லோ புறப்படுகின்றது.

இக்குழுவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கிளைமோர்த் தாக்குதல்!

மட்டக்களப்பு, ஜூன்4

மட்டக்களப்பு கல்லடியில் நேற்றுக்காலை 8 மணியளவில் ரோந்து சென்ற படையினரை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் படையினருக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப்பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் கிணறு ஒன்றில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.

# காவலரண் மீது சூடு!

மட்டக்களப்பு, ஜூன்4

வந்தாறுமூலையில் படையினரின் காவலரண் மீது நேற்றுக்காலை 9.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிப்பாய் ஒருவர் காலில் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

# ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தாலும் புலிகளுடன் நோர்வே உறவைப் பேணும்

## அந்நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

ஒஸ்லோ,ஜூன்4

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தாலும் விடுதலைப் புலிகளுடன் நோர்வே தொடர்ந்து உறவுகளைப் பேணும்.

- இவ்வாறு நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டொல் டென்பேர்க் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது :-

ஜெனீவாவில் பெப்ரவரி மாதம் நடைபெற்ற பேச்சுக்களுக்குப் பின்னர் அமைதி முயற்சிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவானது அதிருப்தியளிக்கிறது. இலங்கை அமைதி முயற்சிகளில் அனுசரணையாளராக செயற்படும் நோர்வே தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணும். அமைதி முயற்சிகளுக்கான அனுசரணையாளர்களாக நாங்கள் செயற்படுவோம். தீர்வை அடைவர்களே (விடுதலைப் புலிகளும், அரசும்)

(12ஆம் பக்கம் பார்க்க)

## சம்மாந்துறை பொலீஸ் நிலையத்தில்

# தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் தப்பி ஓட்டம்

மட்டக்களப்பு, ஜூன்4

சம்மாந்துறை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்த இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு அங்கிருந்து தப்பிச் சென்றார்.

கடந்த 13ஆம் திகதி அம்பாறை மாவட்டம் சொறிக்கல்முனை என்ற இடத்தில் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிதம்பரம் புலேந்திரன் (வயது 22) என்ற அந்த இளைஞரை [illegible] செய்திருந்தனர்.

அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சுச் செயலரின் அனுமதியுடன் இந்த இளைஞர் சம்மாந்துறைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தார்.

மேலதிக விசாரணைக்காக அவரை கொழும்புக்கு ஓரிரு தினங்களில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டநிலையில் -

(12ஆம் பக்கம் பார்க்க)

# மிருசுவில் பகுதியில் நேற்றிரவு கிளைமோர் தாக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்4

மிருசுவிலுக்கும் முகமாலைக்கும் இடையே ஏ9 வீதிக்கு வடக்குப் புறமாக நேற்றிரவு 7.45 மணியளவில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

படையினர் பயணம் செய்த வாகனத்தை இலக்குவைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும்- அதிகாரிகள் தரத்திலான இருவர் காயம்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாகாண தாதியர் சேவைக்கு சுகாதார அமைச்சு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன்4

சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான மாணவ (ஆண்/பெண்) தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆள்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றி குறைந்தபட்சம் மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் நான்கு திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்திபெற்றவர்கள் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விவாகமாகாத ஆண், பெண் இருபாலாரும் மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர்களுக்கு 2006.06.23 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும்இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்பாக ' பணிப்பாளர் (நிர்வாகம்) 1, சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு , சுவசிரிபாய, 385, வனபத்தேகம விமலவங்கதேரர் மாவத்தை, கொழும்பு - 10" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் 02.06.2006 ஆம் திகதிய அரச வர்த்தகமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்தகமானியின் பிரதியை அலுவலக நேரத்தில் ' உதயன்' அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## சுகாதார சேவையின் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூன்4

லேகியம், பான்பராக் போன்ற போதைத் தன்மை ஏற்படுத்தக்கூடிய பொருள்கள் தாயகப்பகுதிக்கு எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டுள்ளதென்று தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் கா.ஓவியன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ சுகாதார சேவைகளால் லேகியம், பான்பராக் போன்ற பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதெனவும் -

இவற்றை எடுத்துவருவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரிய கலாசாலையில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன்4

ஆசிரிய கலாசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள்கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இடம்பெறும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளனஎன கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீகந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறாரின் நலன்களை மேம்படுத்துவதற்குத் திட்டம்

வடமராட்சி, ஜூன்4

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த வேளையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.

அறவழி போராட்டக் குழுவினர் கனடா அபிவிருத்தி அமைப்பின் நிதி உதவியுடன் சர்வதேச பயிற்சி மன்றத்தின் அனுசரணையுடன் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

கொடிகாமம் தெற்கு, நாவற்குழி கிழக்கு, மட்டுவில் கிழக்கு, கைதடி நுணாவில், கைதடி மத்தி, விடத்தற்பளை, இயற்றாலை, மந்துவில் வடக்கு, கெற்பேலி, நுணாவில் மேற்கு ஆகிய பத்து கிராமங்களில் இந்தத் திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கிராமங்களில் சிறுவர் உரிமை பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கினை நடத்துதல், சிறுவர் கழகங்கள் அமைத்தல், சிறுவர் நூலகங்கள் அமைத்தல்,சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல், சிறுவர்களிடையே விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை, கலாசார போட்டிகள் ஆகியவற்றை நடத்துதல் சிறுவர்களை மரம் நடுகை மற்றும் வீட்டுத் தோட்டம் ஆகியவற்றை மேற்கொள்ள ஊக்குவித்தல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தினை முன்னெடுக்க ஒவ்வொரு கிராமத்திற்கும் தொண்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அறவழிப்போராட்டக் குழுவின் தலைவர் எஸ்.எஸ். அருளானந்தம் தெரிவித்தார். (117)

# காணாமற்போன இருவர் குறித்து தகவல் திரட்டுகிறது பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஜூன்4

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போனார்கள் என்று கூறப்படும் இருவர் தொடர்பான தகவல்களை பிரதேச செயலாளர் எஸ். திருவாகரன் கோரியுள்ளார்.

தேவேந்திரன் பாஸ்கரன் (சுன்னாகம்), அந்தோனிப்பிள்ளை மறுசீலன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம்) ஆகியோர் தொடர்பான தகவல்களைத் தரக்கூடிய உறவினர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டப்பட்டுள்ளனர்.

மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போனமை தொடர்பாக விசாரணைப் பிரிவிற்கு தகவல்களை வழங்க வேண்டியுள்ளதாலேயே தகவல்கள் கோரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

# சாவகச்சேரி நீதிமன்றப் பொறுப்பிலுள்ள குழந்தையை தத்து வழங்க நேர்காணல்

தென்மாட்சி, ஜூன்4

சாவகச்சேரி நீதிமன்றின் பொறுப்பில் உள்ள பெண் குழந்தைகளில் ஒன்று தத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இக் குழந்தையை தத்தெடுக்கவுள்ள பெற்றோரைத் தெரிவுசெய்வதற்கான நேர்காணல் எதிர்வரும் ஒன்பதாம் திகதி சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெறுமென நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நீதிமன்றப் பொறுப்பிலுள்ள மற்றொரு குழந்தையை தத்தெடுக்க விண்ணப்பித்த பெற்றோர்களும் இந்த நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (117)

# யாழ். நகரில் மீண்டும் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம் ஜூன்4

யாழ்.நகரப் பகுதியில் மீண்டும் சைக்கிள் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

குறிப்பாக ஆஸ்பத்திரி முன்பாக மணிக்கூண்டு வீதிச் சந்தியில் நிறுத்தப்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஒன்று நேற்றுத் திருட்டுப்போயுள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த காசி தயாளன் என்பவருடைய சைக்கிளே திருட்டுப் போயுள்ளது.

சைக்கிளை விட்டுவிட்டு முன்பாகவுள்ள பல் கட்டும் நிறுவனமொன்றிற்குள் சென்றுவிட்டு திரும்பமுன்- சுமார் 5 நிமிடங்களுக்குள் சைக்கிள் காணாமற்போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (15)

# அழகக உரிமையாளர் சந்திப்பு இன்று

வட்டக்கச்சி, ஜூன்4

கிளிநொச்சி மாவட்ட அழககங்களின் உரிமையாளர்கள், பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரசியல்துறையின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்த கலந்துரையாடலில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அழகக சங்க நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (405)

---

# விறுவிறுப்புக்கு ஜேர்மனி தயார்! நீங்கள்....?

*சுறுசுறுப்பு, விறுவிறுப்பு, திகைப்பு, உல்லாசம் அனைத்துக்கும் மறுபெயர் கால்பந்தாட்டம். உலகக் கிண்ணப் போட்டி அவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்த பந்தாட்டம். இன்னும் ஆறு நாள்கள் மட்டும் தான் உண்டு. ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.*

*இம்முறைக் கொண்டாட்டம் ஜேர்மனியில்தான். பல பில்லியன்களைக் கொட்டித் தயாராகி இருக்கிறது அந்நாடு. முக்கிய நகரங்கள் கேளிக்கைகளும் கொண்டாட்டங்களுமாக இப்போதே களைகட்டி விட்டன. மின்னும் வண்ண விளக்குகள் மத்தியில் கொஞ்சும் இளம் பெண் மயில்கள் என மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.*

**உருவான வரலாறு**

*நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி ரசிகர்களுக்கு ஒரு வரப் பிரசாதம். 1930இல் உருகுவேயில் ஆரம்பித்த இந்தப் பயணம் இன்றும் விறுவிறுப்புக் குறையாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் பல கோடிகளைக் கொட்டிக் குவித்தும் வருகின்றது.*

*1920இல் பிரான்ஸ் கால்பந்தாட்ட நிர்வாகிகள் சிலர் இணைந்து உலகக் கிண்ணத்திற்கான போட்டிக்கு வித்திட்டார்கள். ஜூலிஸ் ரிமெட் அவர்களில் முக்கியமானவர். உலகச் சம்பியன் என்ற மகுடத்தின் கீழ் உலகின் மிகப் பலம் வாய்ந்த கால்பந்தாட்ட அணியைத் தேர்வு செய்வதற்கு வழிசமைத்தவர் அவர்தான்.*


*1904இல் உலக கால்பந்தாட்டச் சம்மேளனம்ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் 1924இலேயே கால்பந்தாட்டம் பெரும் பிரபலமானது. அந்த ஆண்டிலேயே அது ஒலிம்பிக் போட்டியிலும் சேர்க்கப்பட்டது.*

*26.05.1928இல் நெதர்லாந்தின் அம்ஸ்ரடாம் நகரில் உலகக் கால்பந்தாட்டச் சம்மேளனம் மீண்டும் கூடியது. புதிய விதிகளை அதில் அறிமுகப்படுத்தியது. 1930இல் முதல் உலகக் கிண்ணப் போட்டியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. உருகுவே அதற்கான முதல் நாடாகத் தெரிவு செய்யப்பட்டது. அதற்கு இரு காரணங்கள் இருந்தன. ஒன்று, அதற்கு முந்திய ஒலிம்பிக் போட்டியில் அந்த நாடே கால்பந்தாட்டத்தில் வெற்றி பெற்றிருந்தது. மற்றையது, அந்த நாடு சுதந்திரம் பெற்ற நூற்றாண்டு விழாவை அது அப்போது கொண்டாடியது.*

*இப்போது இருப்பதைப் போன்ற நவீன போக்குவரத்து அன்று இல்லை. விமானங்களும் இல்லை. இதனால் விரும்பம் இருந்தபோதும் கடல்தாண்டி, கப்பல்களில் உருகுவே செல்ல பல ஐரோப்பிய நாடுகள் மறுத்துவிட்டன.*

*இருப்பினும் ஜூலிஸ் ரிமெட் கடும் முயற்சி செய்தார். அதன் பயனாக பெல்ஜியம், பிரான்ஸ், யுகோஸ்லாவியா மற்றும் ருமேனியா ஆகிய ஐரோப்பிய அணிகள் முதல் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்றன. முதல் சுற்றில் மொத்தம் 13 அணிகள் இடம்பெற்றிருந்தன. இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவும் உருகுவேயும் மோதின. உருகுவே கிண்ணத்தை வென்றது.*

*போட்டித் தொடர் முழுவதும் எந்தவொரு ஆட்டத்திலும் தோல்வியடையாது உருகுவே சாதனை படைத்தது.*



*1930ஆம் ஆண்டின் பின்னர் இரு போட்டிகள் நடந்தன. இரண்டாம் உலகப் போர் காலத்தில் 12 ஆண்டுகள் போட்டி நடைபெறவில்லை. இதனால் 1938இற்குப் பின்னர் 1950ஆம் ஆண்டிலேயே மீண்டும் உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பமானது.*

*1930இல் இருந்து இதுவரை 16 போட்டிகள் நடந்துள்ளன. 7 நாடுகள் மட்டுமே கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளன. அவை யாவும் ஐரோப்பா மற்றும் தென்னமெரிக்கா கண்டங்களைச் சேர்ந்தவை. இறுதிப் போட்டியில் 11 நாடுகள் மட்டுமே கலந்துகொண்டுள்ளன.*

*1998இல் பிரான்ஸில் நடந்த போட்டியை 37 பில்லியன் பேர் (3,700 கோடி) ரசித்தனர். இறுதிப் போட்டியை மட்டும் 1.3 பில்லியன் (130 கோடி) பேர் பார்த்தனர். நடந்த 64 ஆட்டங்களையும் 2.7 மில்லியன் (270 கோடி) பேர் மைதானங்களில் அமர்ந்திருந்து நேரில் கண்டு ரசித்தனர்.*

*உலகக் கிண்ணத்தை வெல்லவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு நாட்டினதும் கனவு. 100 ஆண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்ட இந்த விளையாட்டு இன்னும் அதன் மெருகு குறையாமல் இருக்கிறது. 1863 இல் இந்த விளையாட்டு பிரிட்டனில் ஆரம்மானது என்று கூறப்படுகின்றது.*

*ஜேர்மன் உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகிறது. சரியாக ஒரு மாதம் தொடரும். ஜூலை 9ஆம் திகதி இறுதி ஆட்டத்துடன் முடியும். 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 32 நாடுகள் முதல் சுற்றில் மோதுகின்றன. முனிச் நகரில் முதல் ஆட்டம் ஆரம்பமாகும்.*

*கடந்த போட்டியை ஆசிய நாடுகளான ஜப்பானும் தென்கொரியாவும் இணைந்து நடத்தின. ஐரோப்பா மற்றும் அமெரிக்கா கண்டங்களை விட்டு வெளியே நடந்த முதல் போட்டியும் அதுதான். அதில் பிரேஸில் அணி கிண்ணத்தைத் தட்டிச் சென்றது. இந்த ஆண்டும் அந்த அணியே பலம் மிக்கதாக இருக்கின்றது. முடிவு இன்னும் 32 நாள்களில் தெரிந்துவிடும்.*

*இனி வரும் ஒரு மாதமும் கோலாகலம்தான்.* ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## அடிப்படைகளை ஏற்காமல் ஏற்புடைய தீர்வு வரவே வராது

'எல்லோரும் ஏறிவிழுந்த குதிரையில் தானும் ஏறி விழுந்தாராம் சக்கடத்தார்' என்ற பேச்சு மொழி நம்மத்தியில் உண்டு.

அரசுத் தலைவர் மஹிந்தரின் அறிவிப்பு அந்த மொழியைத்தான் நமக்கு ஞாபகம் ஊட்டுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட வேண்டிய யோசனைத் திட்டத்துக்கு உரிய அரசியல் வடிவம் கொடுக்கும் நோக்கோடு அரசமைப்பு ஆலோசனைச் சபை ஒன்றையும் அந்த சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்கு ஒரு நிபுணத்துவ உதவிக்குழுவையும் தாம் நியமிக்கப்போகிறார் என்று அவர் அறிவித்திருக்கின்றாார்.

காலத்துக்குக்காலம் தென்னிலங்கையில் அரசியல் தலைமைத்துவம் மாறும்போது வெளியாகும் வழமையான அறிவித்தல்தான் இதுவும் என்பதில் இது குறித்து அதிகம் கவனம் செலுத்தவோ, அலட்டிக்கொள்ளவோ அல்லது ஆரவாரப்படவோ தமிழர் தரப்புக்கு எதுவுமே இல்லை.

இலங்கைத்தீவுக்கான அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக எழுபதுகளின் முற்பகுதியில் அப்போதைய அரசுத் தலைவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவாகட்டும் அல்லது எழுபதுகளின் பிற்பகுதியில் அரசுத் தலைவர் ஜே.ஆர். ஜெயவர்தனாவாகட்டும் ஒரு தலைப்பட்சமாக அறிவித்து செயற்படுத்திய தேசிய அரசுப் பேரவை, அரசமைப்பு நிர்ணய சபை ஆகியவற்றிலிருந்து இப்போதைய ஜனாதிபதி மஹிந்தரின் உத்தேச அரசமைப்பு ஆலோசனைக் கவுன்ஸில் பெரிதும் வேறுபடப்போவதில்லை.

அதேபோல ஜே.ஆர். ஜெயவர்த்தனா பின்னர் கூட்டிய வட்டமேசை மாநாடு, அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ நடத்திய அனைத்துக்கட்சிக் கூட்டம், அதன்பின்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்வுத்திட்ட யோசனைகள் அடங்கிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக அமைத்த அரசமைப்பு கவுன்ஸில் போன்றவை எல்லாமே இந்த வகையைச் சார்ந்தவைதான்.

இந்த நடவடிக்கைகளில் எல்லாம் ஒரு பொருத்தப்பாடு இருப்பதை நாம் காணலாம்.பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளுள் ஒன்றான தமிழரின் கருத்துக்களை - அபிலாசைகளை - ஆதங்கங்களை - எதிர்பார்ப்புகளை - விருப்பு, வெறுப்புகளை - கவனத்தில் எடுக்காமல் , வேண்டுமென்றே - தெரிந்திருந்தும் - புறமொதுக்கி தயாரிக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளே அவை அனைத்தும் ஆகும்.

1972 இல் உருவாக்கப்பட்ட இலங்கைக் குடியரசு அமைப்பும் சரி , 1978 இல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் அரசமைப்பும் சரி, 2001 இல் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசினால் கொண்டுவரப்பட்ட இலங்கைப் பிராந்தியங்களின் ஒன்றிய அமைப்பு நகல் ஆகட்டும் சரி , அவை அனைத்துமே தமிழர் தரப்பின் அபிலாசைகளை ஒரேயடியாய் புறக்கணித்து - பெரும்பான்மை இனத்தவர்களான பௌத்த சிங்களவர்களின் பேரினவாத மேலாதிக்க உறுதிப்பாட்டை சிறுபான்மை இனங்கள் மீது வலிந்து திணிக்கும் விதத்தில் - தயாரிக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டன. அதனால்தான் அவை தோல்வியில் - பயன்தர முடியாமல் - முடிந்தன; அதனால்தான் அவற்றின் விளைவாக நாடு இன்று சீரழிவு நிலைக்கு - கொடூர கட்டத்திற்கு - வந்து நிற்கின்றது.

இப்படி ஒரு தலைப்பட்சமாக - தென்னிலங்கைத் தரப்புக் கருத்துக்களை மட்டும் உள்வாங்கி - தயாரிக்கப்பட்ட அரசமைப்புகளை மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் முழுநாட்டின்மீதும் திணித்ததால்தான் இலங்கைத் தீவு இன்று இந்த இன அழிவுப் போரின் மிக மோசமான கட்டத்திற்கு வந்திருக்கிறது என்பது நமது பட்டறிவு.

விழுந்து அடிபட்டுப் பெற்ற இந்தப் பட்டறிவின் பின்னரும் - அனுபவப் பாடத்தின் பின்பும் - அதே விவகாரத்தை, அதே பாணியில், அரிச்சுவடியில் இருந்து ஆரம்பிக்கின்றார் அரசுத் தலைவர் மஹிந்தர்.

ஒற்றையாட்சிக்குள் மட்டுமே தீர்வு என்ற விடாப்பிடி நிலையில் உறுதியாக நிற்கும் ஜே.வி.பியை அரவணைத்து, கூட்டணிப் பங்காளிகளாக கௌரவித்து வைத்துக்கொண்டு, அவர்களின் இணக்கத்தோடு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதி வடிவத்தை எட்ட முயலுகின்றார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

''முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட'' கதை இது;

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற தீவிர பேரினவாதத் தரப்புகளையும், கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு - ஈழத்தமிழர் தரப்பின் அரசியல் பிரதிநிதிகளை கிட்டவும் எடுக்காமல் ஒதுக்கிவைத்துவிட்டு -

தீர்வுயோசனை என்ற பெயரில் மஹிந்தரின் அரசு தயாரிக்கக்கூடிய யோசனைத் திட்டங்கள் எவையாக இருப்பினும் அவை புலிகளின் - தமிழர் தரப்பின் - பரிசீலனைக்குக் கூட ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பது உறுதி.

ஈழத்தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளாக - நியாயமான எதிர்பார்ப்புகளாக இருக்கின்ற தமிழ்த் தேசியம், தனியான தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை ஏற்று அங்கீகரிக்கவேண்டிய யதார்த்தத்தை கொள்கையளவில்கூட புரியாத - அல்லது புரிய விரும்பாத - பேரினவாத சக்திகளை ஒன்றுதிரட்டி வைத்துக் கொண்டு, 'அனைத்துத் தரப்பிற்கும் ஏற்புடைய தீர்வு' குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. அத்தகைய சக்திகளை அரவணைத்து வைத்துக்கொண்டு இணக்கத் தீர்வு காணப்போவதாக ஆரவாரம்பண்ணுவதும் வெறும் பித்தலாட்டம்தான்.

# வாகனங்களில் வெடிமருந்து கடத்திய வழக்கு; நீதிமன்ற அவமதிப்புக்கு சாரதிகளுக்கு அபராதம்

தென்மராட்சி,ஜூன்4

வாகனங்களில் வெடிமருந்து கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட சாரதிகள் 24 பேருக்கு நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக தலா 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முகமாலை சோதனைச் சாவடியில் வெடிமருந்து இருந்ததாகக் கூறப்படும் 10 'ஹைஏஸ்' வாகனங்கள், 9 லொறிகள், 2 அரச திணைக்கள வாகனங்கள், கார், மினிபஸ், சடலம் ஏற்றும் வாகனம் ஆகியவற்றில் தலா ஒவ்வொரு வாகனங்களை தடுத்து வைத்தனர். அவற்றின் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டனர்.

சிறிய பட்டை வடிவில் உள்ள சி- 4 ரக வெடிபொருள்கள் இந்த வாகனங்களின் அடிப் பகுதியில் ஒட்டி வைக்கப்பட்டிருந்ததாகப் படையினர் தெரிவித்தனர். கைதான சாரதிகள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் கொடிகாமம் பொலீஸாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது அவர்களை சரீரப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை இது குறித்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது வெடிமருந்து கடத்தினார்கள் என்று தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்தனர். அதனையடுத்து அவர்களை 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

அத்துடன் வாகனங்களை வழக்கு முடியும்வரை கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்குமாறும் -

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஒப்பமிட வேண்டுமென்றும் -

நீதிவான் மேலும் உத்தரவிட்டார்.

அதேதினம் பிற்பகலில் சந்தேக நபர்களின் சட்டத்தரணிகளான திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன், எஸ். நிரஞ்சன் ஆகியோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொள்கின்றார்கள் என்று நீதிமன்றத்தில் அப்போது தெரிவித்தனர்.

முற்பகலில் குற்றச்சாட்டை மறுத்த சந்தேக நபர்கள் பிற்பகலில் அதே குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட நிலையில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்தை அவர்கள் இழைத்தனர் என்ற அடிப்படையில் அவர்களுக்கு தலா 250 ரூபா அபராதம் விதித்து நீதிமன்றம் விடுவித்தது.

வாகனங்களை செலுத்துவோர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் -

நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்களில் ஈடுபடக் கூடாது என்றும் - நீதிவான் எச்சரித்தார். (117)

### கூட்டுத்தாபனத்தின் ஊழல்களைக் களைந்து

# பெற்றோலின் விலையைக் குறைக்க உத்தரவிடக்கோரி மனுத்தாக்கல்

பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் இடம்பெற்றுள்ள ஊழல்களைக் களைந்து, அதன் மூலம் பெற்றோலின் விலையைக் குறைத்து விற்பனை செய்ய வைப்பதற்கு உத்தரவிடுமாறு கோரி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

சட்டத்தரணி தர்மதாஸ கோமஸ் என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

பெற்றோலியக் கூட்டுத் தாபனக் கட்டடம் ஒன்று தினசரி ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா என்ற வாடகைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அரசியல்வாதிகள் தேவையற்று - தமது விருப்பத்துக்கு ஏற்ப - கூட்டுத்தாபனத்தில் ஆள்களை வேலைக்குச் சேர்த்து வருகின்றனர். ஊழியர்கள் கள்ளத்தனமாக எரிபொருள்களை விற்பனை செய்கின்றனர். இத்தகைய செயற்பாடுகளினாலேயே எரிபொருள்களின் விலைகள் எக்கச்சக்கமாக உயர்ந்துள்ளன. எனவே, இந்தக் குளறுபடிகள், ஊழல்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, எரிபொருள்கள் குறைந்த விலையில் விற்பனையாவதை உறுதிப்படுத்துவதற்கான உத்தரவை நீதிமன்றம் விடுக்க வேண்டும். இப்படி அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுவில் எதிர் மனுதாரராக பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மற்றும் போக்குவரத்து எரிபொருள்துறை அமைச்சர் பௌஸி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (க)

# தென்மராட்சியில் 399 பேருக்கு மலகூடம் அமைக்க மானியம்

தென்மராட்சி,ஜூன்4

தென்மராட்சிப் பிரதேசத்தில் மலகூடங்கள் அமைப்பதற்கான மானியத்திற்கு 399 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 60 பயனாளிகளுக்கும் சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 339 பயனாளிகளுக்கும் இம் மானியம் வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சாவகச்சேரி நகர், கோவில் குடியிருப்பு, சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கு, மண்டுவில், கல்வயல், நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, நுணாவில் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 60 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மானியம் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (117)

### ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்பு

# இறைமையுள்ள இனம் ஒன்றின் உரிமையை மறுதலிக்கும் செயல்

## மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்4

விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இடம்பெறச் செய்துள்ளமையானது இறைமையுள்ள ஒரு இனத்தின் சுயாட்சி உரிமைகளை மறுதலிப்பதாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்.

இது தொடர்பாக, மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:-

தமிழ் மக்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகளாவர். அவர்களது சுதந்திரத் தாகத்தை எந்தவொரு நாட்டினாலும் அடிபணியவைக்கமுடியாது. சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு இவ்வாறான செயற்பாடுகள்மூலம் ஐரோப்பிய ஒன்றியம் ஊக்கமளிக்குமானால் அது தமிழினப்படுகொலைகளுக்கே வித்தாகிவிடும்.

சிங்கள ஆயுதப்படைகளின் அட்டூழியங்களினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டுவருகின்றனர். தமிழர் தாயகம் சிங்கள, அரச பயங்கரவாத செயற்பாடுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுவருகின்றது. தமது உயிருக்கு உத்தரவாதமின்றி தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து உலக நாடுகளில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர்.

சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்பை முறியடிக்கவும், தமிழர்கள் தமது நிலத்தில் சுதந்திரமாக - கௌரவமாக - பாதுகாப்பாக வாழ்வதற்காக ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகப் போராடி வருகின்றனர். தமிழர்களின் போராட்டத்திற்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் தலைமை தாங்குகிறார். தமிழ்மக்களின் நீதியான போராட்டத்திற்கு பல நாடுகள் ஆதரவு நல்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் ஆகியோரின் உயிர்த் தியாகத்தினாலும் இரத்தம் சிந்தியும் தமிழ்த்தேசம் உருவாக தமிழர் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் ஒருதலைப் பட்சமாக விடுதலைப் புலிகள் மீது தடை விதித்திருப்பது நீதி நெறிமுறைக்கு அப்பாற்பட்ட வஞ்சகத்தனமான செயலாகும்.

இந்தத் தடைவிதிப்பை ஐரோப்பிய ஒன்றியம் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென யாழ். மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

தடை நீக்கப்படாவிட்டால் அமைதி முயற்சிகள் பலவீனமடைந்து இலங்கையில் மீண்டும் போர்மூளும் ஆபத்து உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீதும் தமிழர்களின் நலன்களிற்காக குரல் கொடுக்கும் பொது அமைப்புகள் மீதும் நம்பிக்கை ஏற்படும் விதத்தில் செயற்படாதுபோனால், அவர்கள் எதிர் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் நலன்களிற்காக தமிழர்கள் எப்போதும் பக்கபலமாக இருப்பார்கள். தமிழர்களின் உதவி அந்த நாடுகளுக்குத் தேவை என்பதைப் புரிந்துகொள்வார்களானால், எமது நிலையைப் புரிந்துகொள்வார்கள் - என்று அதில் உள்ளது.

**நாளை**

வைகாசி - 22
திங்கட்கிழமை
05.06.2006
திதி : நவமி
மாலை : 08.00 வரை
நட்சத்திரம் : உத்தரம்
முன்னிரவு : 10.26 வரை
சுபநேரம் : 11.52-01.22
ராகுகாலம் : 07.22-08.52

**உதயவாக்கு**

வெற்றிமிக்க தோல்விகள் சில இருக்கின்றன. அவை வெற்றிகளை விடச் சிறந்தவை.

-ரோச் பொகால்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி பார்வதி பாலசுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*



காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும், அத்தியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி பாலசுப்பிரமணியம் நேற்று (03.06.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற திருமதி இராசரத்தினம் நாகம்மாவின் சகோதரியும் தெய்வமாலினியின் அன்புத் தாயும் க.சுந்தரலிங்கம் (அதிபர், யா/தம்பாட்டி அ.த.க.வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியும் சர்மிளா, யசோதரன் (கணிதப் பிரிவு -2007 இந்துக் கல்லூரி) பொ.சிவகுமாரன் (ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
க. சுந்தரலிங்கம்
(அதிபர்- மருமகன்)

*116, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.*
(50795) (39-19-14)

## இணுவில் கல்லூரியில் அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

இணுவில் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் கல்லூரி அதிபர் சு.சதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(202)


அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு
றோயல் குளுக்கோஸ்
100 % சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By: ROYAL INDUSTRIES COLOMBO-12 ☎0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
☎ 021 222 2567
100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90



G.C.E. (A/L) இன் பின்னர்



வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர்வதற்கு அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

FOUNDATION DEGREE PROGRAMME

- UK. Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவித தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான STUDENT VISA க்களை பெற்றுக் கொள்கின்றனர்
- இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத்துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக் கொள்ளமுடியும்.
- பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும், சான்றிதழ்களும் இப்பாடநெறிக்கு வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில் வாய்ப்பிற்கான வாய்ப்புகள் இலகுவாய் அமைகின்றன.

கற்கை நெறியின் கட்டமைப்பு
G.C.E. (O/L) or G.C.E (A/L) → Foundation Degree 3 Months → Bsc/BA Degree UK-Canada
கற்கை நெறிமுடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட 6 சான்றிதழ்கள்

பாடப்பரப்பு
- தகவல் தொழில்நுட்பமும் கணனிப் பிரயோகமும்
- ஆங்கில மொழிப்பயிற்சி
- ஆளுமை மற்றும் திறன் விருத்தி

குறிப்பு: இக்கற்கை நெறி நிறைவில் வெளிநாடுகளில் (UK Canada) உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு அதற்கான STUDENT VISA க்களை பெறுவதற்கான பூரண வழிகாட்டுதல்களும் LONDON INSTITUTE இனால் வழங்கப்படும்.

LIFE LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25 A, Hospital Road, Dehiwala. Tel : 011 5518666, 0777 715788

GoodWIN Ads


## இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் முறைசாராக் கல்வி

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் முறைசாராக்கல்வி வகுப்புகள் மீண்டும் வழமை போல் நடைபெற்று வருகின்றன.

சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களையும் வருகை தருமாறு பாடசாலை அதிபர் திருமதி வி.பேரின்பநாதன் கேட்டுள்ளார்.

## சாவகச்சேரி சந்தை குத்தகை இரத்து

தென்மராட்சி,ஜூன்4

சாவகச்சேரி நகரசபை பொதுச் சந்தையில் வரி அறவிடப்படும் பணியை நாளை தொடக்கம் நகரசபை உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வருடத்திற்கு வழங்கப்பட்ட சந்தைக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டு சபை உத்தியோகத்தர்கள் வரி அறவிடும் பணியினை மேற்கொள்வர் என நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிதுள்ளார்.

(117)

## தட்டச்சுப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.மத்திய கல்லூரியில் ஆங்கில தட்டச்சுப் பயிற்சிநெறி நடைபெற்று வருகின்றது.

பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்பும் ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202)

## சமயச் சொற்பொழிவு

வடமராட்சி,ஜூன்4

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "இராமாயணம்" தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவை பல்கலைக்கழக மாணவர் எஸ்.சுகந்தன் நிகழ்த்துவார்.

(173)





தங்குமிட வசதியுடன்

ABOUT US
The AEC Edu Group,Listed on the Alternative Investemt mareet (AIM) of the London stock Exchange. is a premier provider of quality education and training servics. Established for more then 20 years, we are proud to be the education provider to more then 16,000 students worldwide. We offer a broad range of quality programmes from English to "O" and "A" Leves to postgraduate qualifications including MBA and Doctorate in singapore,in collaboration with world class and internationally recognised universities and institution. We ara accredited by the singapore Quality Class for Private Education Organisation (SQC-PEO)and Casetrust.

AEC
CaseTrust
SINGAPORE QUALITY CLASS for Private Education Organisations

ஆலோசனைக்கு:-
சிங்கப்பூரின் AEC கல்லூரி ஆசிரியர் குழாம் இங்கு.........
இவர்களோடு AEC கல்லூரியின் யாழ் மாணவர்களும்.

குறிப்பு:-
மாணவர்களின் நன்மை கருதி பெற்றோர்களும் கலந்துகொள்ளலாம்.

Mr.Nabs Naidu
Vice President
AEC Business School.

Mr.Gobes BA(Hons)
Assistant Drector
Singapore Study Center.

Closing Date : 09/06/2006

- Foundation Course
- Diploma Course
- Advance Diploma Course
- Bachelor Degrees
- MBA

- Multimedia
- Hotel Management (On Job Raining 700 S$)
- Business Management
- LCCI
- Hospitality Management
- Professional Accounting Programme (ACCA)
- Certified Accounting Technicians (CAT)
- ESOL (English Language)
- London A/Level And O/Level



CONTACT US:- Kajan:- 0773715961
Vaheeshan:- 0776242464
Vel:- 0776401040

School Address:
141 Market Street, #13-00
AEC Center, Singapore 048944.
Tel: 0065 62211804
Web: www.aecedu.sg

Jaffna Address:
COSY HOTTL & RESTAURANT
15 Sirambiyadi Lane,
Off Stanley Road,
Jaffna, Srilanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வேயில் 40 நாள்கள் தங்கி ஈழத்தமிழர் நிலைபற்றி பரப்புரை

## ஈழவேந்தன் எம்.பி. தரும் விவரம்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், தமிழர் ஆய்வு மையம் மற்றும் அன்னை பூபதி கல்விக் கூடம் ஆகியவற்றின் அழைப்பின் பேரில் அண்மையில் நோர்வேக்கு விஜயம் செய்திருந்தார். சுமார் 40 நாள்கள் அங்கு தங்கியிருந்த அவர், தமது பயணம் குறித்து எழுதிய தொகுப்பு இது.

அன்னை பூபதி கல்விக்கூடத்தின் இயக்குநர் சிவதாஸ் அவர்களும் அவருக்குப் பக்கபலமாகப் பணியாற்றும் தமிழ் அறிஞர்களும், கல்விமான்களும், அன்னை பூபதி கல்விக்கூடம் சார்ந்த 16 கிளைகளில் என்னைப் பேச வைத்ததோடு நோர்வேயில் இயங்கும் தமிழ்ச்சங்கங்கள், முருகன் கோயில்கள், கத்தோலிக்க ஒன்றியம் போன்ற அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு நோர்வேயின் பல்வேறு மாநிலங்களில் உரை நிகழ்த்தும் வாய்ப்பினையும் வழங்கினர்.

உள்ளூராட்சிமன்ற மேயர்கள், பல்கலைக் கழக வட்டாரங்கள், தமிழர் மறுவாழ்வுக் கழக அமைப்புகள் பலவற்றின் அழைப்பின் பேரில் நோர்வே சென்ற நான் நிகழ்த்திய உரைகள் உரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

உள்ளூராட்சி மன்ற மேயர்கள் பலர் நாம் தங்கியிருந்த நண்பர்கள் இல்லத்திற்கு வருகை தந்து எம்மை வாழ்த்தி பரிசில்கள் வழங்கியும் ஈழத்தமிழர் சிக்கலில் நமக்குள்ள ஈடுபாட்டினை எம்மவர் வியக்கும் முறையிலும் எடுத்துரைத்தனர்.

ஒஸ்லோ பல்கலைக்கழகம் உட்பட நோர்வேயில் இயங்குகின்ற ரொம்கோ பல்கலைக் கழகம் உட்பட பல்வேறு மாநில பல்கலைக்கழகங்களுடன் நான் தொடர்புகொண்டபோது ஆழம் மிக்க கருத்தரங்குகளை பல்கலைக்கழகத் தலைமைப்பீடங்கள் உருவாக்கித்தந்தன.

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் அரசியல் பிரிவுத் தலைவராக விளங்குகின்ற ஸ்ரொக் அவர்கள் ஈழத்தமிழர் சிக்கலை ஒட்டி நான் வரைந்துள்ள ஆய்வுக்கட்டுரையை எமக்குக் காட்டியதோடு ஈழத்தமிழருக்கு நிலையான தீர்வு எதுவாக இருக்கவேண்டும் என்பதனையும் எடுத்துரைத்தார். நடைமுறையில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆட்சிக்கு ஒப்புதல் அளிப்பதுவே உகந்த தீர்வாக இருக்க வேண்டும் என்பதிலேயே அவர் உறுதியாக இருக்கிறார். எனவேதான் அத்தகைய கொள்கை உறுதிபடைத்தவராக விளங்கியதனால் அவர் இலங்கை வருவதை சிறிலங்கா அரசு தடுத்துள்ளது.

பல்வேறு துறைசார்ந்த பேராசிரியர்களையும் நான் சந்தித்ததில் பயனுள்ளது. எனினும் நோபல் பரிசு வழங்கும் ஆணைக்குழுவின் தலைவர் எம் சந்திப்புப் பற்றி மனம்விட்டுப் பேசிய உரையாடல் எம் நிலையை அவருக்கு விளக்குவதற்கும் உலக அரங்கில் ஈழத்தமிழருக்காக எத்தகைய உதவிகள் வழங்கமுடியும் என எடுத்துரைத்த கருத்துக்கள் நெஞ்சைத்தொடும் முறையில் அமைந்திருந்தது. சிறிலங்காவின் சிங்கள ஆட்சிப்பீடம் மாற்றங்களுக்கு ஆளாகி இருப்பினும் தமிழர்களுக்கு உரிமை வழங்குவதில் அவர்களிடையே எத்தகைய மருந்தளவு மனமாற்றமும் இல்லை என்று நாம் பேராசிரியருக்கு எடுத்துரைத்த கருத்தினை அவர் முழுமையாக ஏற்றார். தனது செல்வாக்கை வைத்துக்கொண்டு உலக அரங்கில் எம் சார்பில் குரலெழுப்புவதற்குத் தாம் ஆயத்தம் என்று கூறிய கூற்று எமக்கு தெம்பு தரும் கூற்றாகும்.

### பிரபாகரன் வாழ்த்தினைப் பெற்ற நோர்வீஜியன் தமிழ்க்குழந்தைகள்

நோர்வேயின் பல்வேறு மாநிலங்களில் 12 ஆயிரம் ஈழத்தமிழர்கள் வெவ்வேறு வாழ்க்கை நிலையில் வாழ்கின்றார்கள். உலகின் பல நாடுகளிற்கு எம் தமிழர்கள் ஏதும் அற்ற ஏதிலிகளாக வந்தபோதும் வாழ்க்கையில் ஏற்றம் கண்டு அவர்கள் முன்னேறி வருவது தமிழன் எங்கு வாழ்ந்தாலும் முயற்சி உடையவனாகவும் தன்னம்பிக்கை உடையவனாகவும் வாழ்கின்றவன் என்ற கருத்தினை அவர்கள் வாழ்கின்ற வாழ்வு எடுத்துக்காட்டியது. 'அத்தோடு உலகின் எந்த நாடுகளையும் விட நோர்வேயில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தம் பிள்ளைகளுக்கு தமிழ்க் கல்வியை ஊட்டுவதில் மிக்க அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது நோர்வேயில் வாழ்கின்ற தமிழ்க் குழந்தைகள் தமிழை இயல்பான முறையில் தெளிவாக உச்சரிப்பதிலிருந்து காணக்கூடியதாக இருக்கின்றது. பல நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழ் அகதிகள் என்னைக் கண்டு உரையாடியுள்ளனர். ஆனால், நோர்வேயில் வதியும் எம் தமிழ் குழந்தைகள் கையாளுகின்ற தூய தமிழ் எம் உள்ளத்தை ஆட்கொண்டுள்ளது'' என்று தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறியதை அறியத்தக்கதாக உள்ளது. நோர்வேயில் குடியேறியுள்ள இளைஞர்கள் நோர்வீஜியன் பெண்களைத் திருமணம் செய்த போதும் அந்த நோர்வீஜியன் பெண்கள் உட்பட குழந்தைகள் அனைவரும் பேசும் தமிழ், எழுதும் தமிழ், பாடும் பாடல், ஆடும் ஆடல் அவர்கள் தமிழோடு, தமிழர் வாழ்வோடு ஒட்டியதைக் காட்டுகின்றது. குறிப்பாக நோர்வீஜியன் பெண்ணைத் திருமணம் செய்துள்ள திலீபன் குடும்பம் தமிழ் மயமாகக் காட்சியளிக்கின்றது. அவர்களுடைய பிள்ளைகள் எம்.எஸ்.சுப்பு லட்சுமியின் பாடல்களையும், சுந்தராம்பாள், பட்டம்மாள், ஜானகி, நித்தியஸ்ரீ ஆகியோரின் பாடல்களை உள்ளம் உருகப் பாடும்போது நம்பமுடியாத அளவிற்கு மெய்சிலிர்க்கின்றது. அவர்கள் பாடிய ஒலிப்பேழைகள் சிலவற்றை நான் இங்கு கொண்டுவந்துள்ளேன்.

### அரசியல் தலைவர்கள் சந்திப்பு

இவை நீங்கலாக ஒஸ்லோ பாராளுமன்றத்தில் சொல்ஹெய்ம் உட்பட பெரும் அறிவியல் தலைவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அத்தோடு வெளியுறவு அமைச்சின் செயலாளர் பலரோடும் கலந்துரையாடி விடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடைகூறி ஈழத்தமிழர்கள் சிக்கலை அவர்கள் நன்கு புரியும் விதத்தில் எடுத்துரைக்கும் வாய்ப்புக் கிடைத்தமை என் பயணத்தின் முக்கிய வெற்றி என்று கருதுகின்றேன். அவை அனைத்திற்கும் மேலாக சொல்ஹெய்மிற்குப் பதிலாக சிறப்புத் தூதுவராகப் பதவியேற்றிருக்கும் ஜோன் ஹன்சர் மற்றும் பிரமுகர்களுடன் நடத்திய உரையாடல் ஆழம்மிக்கதாக அமைந்திருந்தது. ஜோன் ஹன்சர் போவர் இலங்கை சிறப்புத்தூதுவர் பதவியை ஏற்பதற்கு நான்கு நாள்களுக்கு முன்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பாஸ்கரன், விடுதலைப் புலிகள் அமைப்பின் செயலாளர் சுரேஷ், மகளிர் அமைப்பின் செயலாளர் திருமதி திலகவதி, திரு.எட்வின் உட்பட நாம் நடத்திய உரையாடல் மிக்க பயனுள்ளதாக அமைந்திருந்தது. எரிக்சொல்ஹெய்ம் தாம் வகித்த பதவியிலிருந்து விலகுவது எமக்குக் கவலை அளிக்கின்றது என்று குறிப்பிட்ட நாம் பலஸ்தீன விடுதலை இயக்க வரலாற்றினை நன்கு உணர்ந்துள்ள நீங்கள் அவர் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப பொறுப்பேற்றுள்ளது எமக்குத் தெம்புதருகின்றது. பலஸ்தீனர்கள் இழந்த நாட்டினை மீட்கப் போராடுகின்றார்கள். நாமோ இருக்கின்ற நாட்டினை இழக்காதிருக்கப் போராடுகின்றோம். எனவே எமது கோரிக்கை, வரலாற்று அடிப்படையிலும், சட்ட அடிப்படையிலும் மிக்க வலுவுடையதென்று குறிப்பிட்ட நாம், எனினும் நாம் எந்த நிலையிலும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைக் குறைத்து மதிப்பிட மறுக்கின்றோம். அவர்களை என்றும் தாழ்த்திக் கூறவும் மறுக்கின்றோம். அவர்களின் விடுதலை வேட்கையை அன்று தொட்டு இன்றுவரை ஈழத்தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்று குறிப்பிட்டேன். பலஸ்தீன விடுதலை வரலாற்றினை நன்கு அறிந்துள்ள நீங்கள் ''ஈழத்தமிழர் வரலாற்றினை ஒப்புநோக்கி ஏற்கனவே விடுதலைப் புலிகளின் ஆட்சி நடைமுறையில் இருக்கின்றது என்பதையும் உணர்ந்து அதற்கு சட்டவலுக் கொடுக்கின்ற முறையில் உங்கள் பணி அமைய வேண்டும் என்று நாம் அவரிடம் குறிப்பிட்ட போது அவர் பூத்த புன்முறுவல் பொருள் பொதிந்திருந்ததாக அமைந்திருந்தது''.



இன்றைய சூழ்நிலையில் ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில் நோர்வே நீங்கலாக வேறு ஒரு நாடும் உதவுவதற்கு இல்லை என்று குறிப்பிட்ட நாம், இந்தியாவின் வாழ்த்தலுடன் தமிழீழம் தோன்றுவதற்கு நீங்கள் இசைவு கொடுக்க அங்கீகாரம் கொடுக்கவேண்டும் என்று வேண்டினேன்.

### தமிழ் இணையம்

தமிழ் இணையத்தின் இயக்குநர் ஜெயச்சந்திரன் கோபிநாத் அவர்களுக்கு 2 மணி நேரம் ஈழத்தமிழர் சிக்கலை ஒட்டி ஆங்கிலத்தில் நேர்காணல் வழங்கினோம். இவருடன் தான் சென்ற ஆண்டு படுகொலை செய்யப்பட்ட புகழ்பெற்ற ஊடகவியலாளர் சிவராம் அவர்களும் தங்கியிருந்து பல ஆக்கப்பணிகள் ஆற்றியதும் அவர் வழங்கிய நேர்காணலும் பதியப்பட்டு தமிழ் இணையத்தளத்தில் பேணப்பட்டும் வருகின்றன.

சுருங்கக் கூறின் எம் சாவும் பொருளுடையதாக அமையவேண்டும். அத்தோடு, எமது வீரதீரச் செயல்கள், நாம் ஏன் இப்பேரழிவிற்கு ஆளாகியுள்ளோம் என்ற செய்திகள் அனைத்தும் உலகம் அறிந்தாக வேண்டும். நோர்வே போன்ற நாடுகளிற்கு நாம் பரப்புரை ஆற்றச் சென்றபணி இந்த உண்மையை உணர்த்தி நிற்கின்றது. ✱

# நந்தி ஒரு நந்தாவிளக்கு

ஓராண்டு கழிந்த நிலையில் ஒரு சான்றோனை நினைவுகூரும் நாள் இன்று. நினைவில் ஆழப்பதிந்து அந்த உருவம் மீண்டும் நமது கண் முன்னே தோன்றாதா என்ற ஏக்கமும் உடன் எழ உணர்வு அலைகளில் மிதக்கின்றோம். உலகத்திலே பலர் தோன்றுகிறார்கள் ஆனால், பெருமையுடன் வாழ்ந்து புகழோடு மறைபவர் சிலரே. அந்தச் சிலரின் வரிசையில் நந்தியும் ஒருவர்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் என்ற பெயரைவிட 'நந்தி' என்ற புனைபெயரால் புகழ்பெற்றவர். மருத்துவர் என்ற பணிநிலைக்கும் மேலாக 'இலக்கியம்' படைக்கும் எழுத்தாளர் என்ற பணியால் தமிழர் வரலாற்றிலேயே ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றவர்.

பழந்தமிழ் நூலான புறநானூறு 'மருத்துவன் தாமோதரனார்' என்ற ஒரு புலவரை எமக்கு அறிமுகம் செய்துள்ளது. அவரை நாம் நேரில் காணவில்லை. ஆனால் பாடலில் தரிசிக்கின்றோம். மக்கள் பசிப்பிணி தீரப் பணி செய்த அந்தப் புலவர் புறநானூற்றில் இடம்பெற்றார். ஆனால், பேராசிரியர் நந்தியோ எமது காலத்தில் எம்மோடு வாழ்ந்தவர் என்பதை நினைவுகூரும்போது மெய்சிலிர்க்கிறது.


தமிழ்ப்பணியையும் மருத்துவப்பணியையும் திறம்பட ஆற்றிய நந்தியின் பெருமை உலகம் அறிந்தது - அவர் மக்கள் உள, உடல் நலம் பேணும் பணியில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டவர். சிறுகதை, கட்டுரை, நாவல் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களாக நந்தியின் படைப்புகள் பல வெளிவந்துள்ளன. அவர் தமது எழுத்துக்களின் மூலமாக மக்களை நெறிப்படுத்தும் இலக்கிய மருத்துவனாகத் திகழ்ந்தார்.

பேசுவதற்கும் பழகுவதற்கும் இனிய இத்தமிழ்ப் பணியாளர் இன்று எம்மிடையே இல்லை என்ற 'புலம்பல் மரபை' நாம் முற்றாக மறந்துவிடவேண்டும். இதற்கும் நந்தியே வழிகாட்டியுள்ளார். மனிதனின் பிறப்பும் வாழ்வும் பிறருக்குப் பயன் படவேண்டும் என்பதே நந்தி காட்டிய வழியாகும். குடும்பக்கடமைகளுக்கு அப்பால் சமூகம், நாடு என்ற பரந்துபட்ட நிலையில் அவர் பணியாற்ற வழிகாட்டினார். அவருடைய இலக்கியப்பணி இன்னொரு ஆற்றுப்படுத்தலையும் செய்துள்ளது. விஞ்ஞானம் பற்றிய கல்வியறிவு என்பது வாழ்வியலின் முழுமையான பணிகளைச் செய்யப் போதுமானதன்று.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

'வழிபாடு' பற்றிய கல்வியே வாழ்வியலைச் செம்மையாக்கும். மனித விழுமியங்களைப் பற்றிய நிறைவான அறிவை எல்லோரும் பெறவேண்டும். ஒரு கல்வியாளனின் கல்விப்பணியில் இதுவே அடிப்படையாக அமையவேண்டும். அன்பு, தொண்டு என்ற இரண்டு நற்பண்புகளும் ஒரு மருத்துவனுக்கு இன்றியமையாதவை. ஆனால், அதை மக்கள் அனைவரும் பெற்றிருப்பதே சாலச்சிறந்தது.

இத்தகைய புதிய ஆற்றுப்படுத்தலில் நந்தியின் பணி உலகம் முழுவதுமே பரந்து நின்றது. எங்கோ ஒரு மூலையில் வாழ்கின்ற ஏழை வாசகனும் அவருடைய எழுத்துக்களாலும் பயன்பெற முடிந்தது. மனித வாழ்வியலில் சீர்மையையும் சிறப்பையும் தரவல்ல வழிபாட்டுக்கு எம்மை வழிநடத்திய பேராசிரியர் நந்தி எமக்கு 'நந்தாவிளக்கு' என்றால் மிகையாகாது.



இருள் சூழ்ந்த மனதில் அவருடைய ஒளிகாலும் அறிவுரைகள் தெளிவை ஏற்படுத்தும். எதையும் காலத்தோடு இணைந்து செய்யும் அவருடைய செயற்பாட்டுத்திறன் அனைவரையும் ஈர்த்து நிற்கும்.

சமூகத்திலே அறிவுடைய, அன்புடைய, அருளுடைய இளம் தலைமுறைகளை உருவாக்க நந்தி கூறிய வழிகளே சிறந்தவை. அவர் காட்டிய வழித்தடம் நம்முன்னோரின் வாழ்வுத்தடமே. அதன்வழி நாமும் நடப்பதே நன்று. விஞ்ஞான தகவல், தொழில்நுட்பத்தொடர்பாடல்கள் பெருகிய இக்காலகட்டத்தில் நந்தி காட்டிய உணர்வுவழித் தொடர்பே உலகத்தை ஒன்றாய் இணைக்கவல்லது. அதை உணர்ந்திட இன்றைய நாளை அவரது நினைவில்கழிப்போம்.

மனித வாழ்க்கையில் காலத்துக்குக்காலம் தோன்றி வழிகாட்டும் சான்றோர்களின் வரிசையில் நந்தி நம்மருகில் நிற்பவர். நம்மை நல்வழியில் ஆற்றுப்படுத்துவர். என்றும் அணையாத ஒளி விளக்காய் நமது உள்ளத்தில் நிலைத்து நிற்பவர். அவரோடு பழகிய நாள்கள் வாழ்க்கைக்கு வலுவூட்டுவன. அவர் செய்த பணியை நாம் தொடர்வதே அவருக்கு நாம் ஆற்றவேண்டிய நன்றிக்கடனாகும். ★

## நந்தியின் வழித்தடங்களைப் பற்றி நாங்கள்.....

சென்று போன அந்த ''ஜூன் 04'' ஏன் வந்தது
எங்கள் வெள்ளை மாளிகையில் இருள் ஏன் நிறைந்தது
ஜொலித்துக் கொண்டிருந்த எங்கள் கறுப்பு வைரம் ஒளியிழந்தது
சமுதாய மருத்துவத்துறை தன் உயிரிழந்தது
இழந்து போனதை நினைக்கையில்
எந்தக் கணமும் நெஞ்சம் கனக்குமே

இலக்கியத்தில் தடையில்லா 'நந்தி'யாய்
யாழ். பல்கலையின் வாழ்நாள் பேராசிரியராய்
மருத்துவ பீட தூண்களில் ஒன்றாய்
சமுதாய மருத்துவத்தின் தந்தையாய், தலைவராய்
மாணவர் இதயங்களில் தெய்வமாய்
விளங்கிய சுந்தரரே எங்கு சென்றீர்

இலக்கியம் ஒரு கரை, மருத்துவம் மறு கரை
இரண்டையும் இணைத்து ஓடிய பெரு நதியே
உன் பயணம் முடித்து கடல் கலந்தாயோ!
நதியின் ஈரத்தில் முளைவிட்ட வித்துக்கள்
விருட்சங்களாய் உன் பெயர் சொல்லும்

மாணவர்கள் முதல் என்றீர், மருத்துவ பீடமென்றீர்
சொந்த நலன் பேணல் கடைசி என்று சொல்லி வைத்தீர்
சொன்னதுடன் நில்லாமல் செயலினிலும் காட்டி நின்றீர்
முத்தான மூன்று மாணவர்கள் உம் பணியில்
சொத்தாக இருந்த எங்கள் சுந்தரரே அமைதி கொள்ளும்

சுமந்திருக்கும் நினைவுகளோடு
கனத்திருக்கும் இதயங்களோடு
உங்கள் வழித் தடங்களைப் பற்றி நாங்கள்.....

பிரியா நினைவுகளுடன்
சமுதாய மருத்துவத் துறையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC works at promoting lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world. In Sri Lanka, DRC supports reintegration of returned persons in the North and East and capacity building of local partner organisations. DRC's head office is located in Vavuniya, with district offices in Trincomalee and Kilinochchi.

## VACANCIES

### Team Leaders. Kilinochchi/Mullaitivu (Two positions)

The Team Leaders form part of the management team in Kilinochchi and coordinates all DRC interventions In Kilinochchi or Mullaitivu District. assumes. responsibility in planning, implementing, monitoring and evaluating of DRC activities in the relevant district, including the external relationships with stakeholders and duty bearers. The Team Leader leads all coordination with project partners and secures all project objectives and contractual obligations are met, and makes sure partners are Monitored and supported according to their performance. S/he makes sure all DRC project interventions are implemented properly and internal coherence of interventions Is granted. The Team Leader acts as the direct supervisor of Field Officers assigned to the district and partially supervise a team of shared staff assuming wider responsibilities. S/he supports the senior management in decision making through suggestions and provision, of potential solutions in all relevant areas.

This positions will be based in Kil'nochchi.

**Qualifications:**

Appropriate candidates shall count on the following characteristics; .

- Basic University degree preferable in Social Science with humanitarians.
- Proven solid background In project and staff management.
- Min. 5 years work experience in relevant field, preferably with national or International service provider institutions
- Demonstrated capacity to guide teams
- Proven capacity and commitment to work at field level
- Very good English skills (verbal and written)
- Sound skills in diplomacy and tact
- Good interpersonal skills.

### Technical Officer: Kilinochchi

The Technical Officer will assist the Contruction Advisor in all aspects of reconstruction of Infrastructure and development, implementation and documentation of the rehabilitation programme.

The Technical Officer will work closely with local partners, relevant Government departments and other stakeholders, and promote a co-ordinated approach to rehabilitation.

This position will be based in Kilinoochchi

**Qualifications:**

- Relevant technical qualification such as a National Diploma in Technology (NDT) civil from a recognized institutuion
- Experience of rehabilitation/development work (especially monitoring of infrastructure projects) would be an advantage
- Ability to identify emerging needs and problems in the district relevant to the rehabilitation programme Good liaison skills
- Experience of data collection. documentation and analysis
- Computer skills in MS office and data management
- Good report writing skills
- Ability to communicate in English

### Feild Audit Assistant - Kilinochchi

The Audit Assistant will be responsible for examination verification of day to day grant accounting, verifying partner accounts, preparation of monthly financial statements Etc, under the supervision of the Head of finance & Admin.

This position will be based In Kilinochchi

**Qualifications:**

- Minimum GCE Advanced Level.
- Part Professional qualifications in accounting, preferably graduates.
- Minimum 03 years experience in bookkeeping and finalization of accounts.
- Good communication and inter personal skills.
- Computer skills in MS Office, particularly spreadsheets.
- Good written and spoKen English. Ability to converse in and read Tamil required.

Please forward your Curriculam Vitae including contact telephone No and names of two unrelated referees to the following address within 07 days of this advertisement.
Position applied for should be indicated on the top left hand side of the envelope.

**Head - Finance & Administrration Danish Refugee Council**
**No. 77, 1 st Floor**
**1st Cross Street,**
**Vavuniya. .**
**Fax No, 024-2224009**
**E.mail: recruitment@drc-lk.org**

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
26 - 05 - 1950



ஆண்டவன் அடியில்
16 - 05 - 2005

**திருமதி குகேந்திரன் நகுலேஸ்வரி** (பிறேமா)

*(முன்னாள் தாதி உத்தியோகத்தர்)*

ஓராண்டு கழிந்து விட்டதே
எம் குலவிளக்காய் எமக்கெல்லாம்
ஒளி தந்து நல்வாழ்வும்
வளமும் அளித்த எங்கள் அன்புத் தெய்வமே!
தாயின் சிகரமே!
ஆறாத்துயரில் துடிக்கின்றோம்
உனை நினைத்தே
உங்கள் பிரிவால் துயருறும்

*இல.6, சென். ஆன்ஸ் ஒழுங்கை,*
*சந்தனமாதா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (50736)

**குடும்பத்தினர்.**
கணவர்: ந.குகேந்திரன்,
மகன்: குணபிருந்தாவன்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு
05 - 05 - 1931



பிரிவு
05 - 05 - 2006

எமது குடும்பத் தலைவர்

**அமரர் நீலையினார் சிதம்பரப்பிள்ளை**

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.''

மேற்படி வள்ளுவன் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்த எங்கள் அன்பு ஐயா அவர்களின் வீட்டுக் கிருத்தியம் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இன்று (04.06.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வெள்ளாம் போக்கட்டி,*
*கொடிகாமம்.* (50677)

அன்புடன்
**குடும்பத்தினர்.**


## Get Your Degree
From The Most Prestigious Universities In

# Russia

**Join The Group of More Than 5000 Russian Degree Qualified Specialists In Sri Lanka**

**MEDICINE**
**ENGINEERING** (Telecommunication, Civil, Aircraft, Marine)
**SHORT TERM RUSSIAN LANGUAGE COURSE**
**AGRICULTURE & IT** (Computing) etc ...

*High Quality Education at Affordable Fees*

**Moscow Medical Academy**
**Peoples Friendship University (Lumumba)**
**Russian State Medical University**
**Kursk University**
**St. Petersburg Aerospace University**
**and other State Universities**



** Special Offers Available*

**Call Olga / Natasha 2685429, 2685440, 2686684**
Fax: 2686084 E-mail: rusinfor@sltnet.lk
(Monday to Friday 9 am to 5 pm)

**Russian Education for Development**
**Cultural Centre of the Russian Embassy**
No.10, Independence Avenue, Colombo 07.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**solidar**

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | Norwegian People's Aid

The Solidar Group - ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance) is now recruiting experienced and qualified engineers for Phase III Reconstruction activity in the Tsunami affected districts of Jaffna (Vadamarachchi East) and Mulaitivu. Solidar is committed to building more than 1,000 permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, playgrounds, preschools, community centres, water & sanitation and road building. Based in Kilinochchi, Solidar is now recruiting the following positions.

### Project Engineers

Experienced Project Engineers are required to manage and implement housing and community construction projects in coordination with Quality Assurance Officers.

The Project Engineer should have a degree in Civil or Structural Engineering.

He/She should have an extensive construction site supervision experience.

He/She should be flexible about their work schedule.
Interested candidates should submit a CV and Cover Latter by email to : asconsghada@sltnet.lk

Alternatively, submissions may be sent by mail to:

**Ms. Ghada Ajami,**
**Project Manager Construction,**
**Solidar Contruction Office,**
**160, milepost, Paranthan, Kilinochchi.**

(C/49482)

## சாவகச்சேரி விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்: கமநலசேவை நிலையம் ஏற்பாடு

தென்மராட்சி கிழக்கு, ஜூன் 4

சாவகச்சேரி கமநல சேவை நிலையம் பிரதேச விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளது.

இதன்படி விவசாயிகளின் பெயர், விவரங்களை விவசாய சம்மேளனங்கள் மூலம் அது கோரியுள்ளது.

பயனாளிகளின் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் தற்போதைய செய்கைபண்ணப்படும் பயிர் தேவைப்படும் மண்ணெண்ணெய் அளவு போன்ற விவரங்களை உடனடியாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு சாவகச்சேரி கமநலசேவை நிலையம் கோரியுள்ளது. (122)

## யாழ்.ஆஸ்பத்திரியில் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்திற்குள் தவறவிட்டவர்களின் தேசிய அடையாளஅட்டைகள் கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கீழே பெயர் குறிப்பிடப்படுபவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி வைத்தியசாலை அலுவலகத்தில் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டைக்குரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:

கனகராசா வரலட்சுமி (இராமலிங்கம் வீதி,மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி), நாகேஸ்வரி சுப்பிரமணியம் (635, அராலி கிழக்கு, அராலி), அபூர்வசிங்கம் தெய்வீகராணி (சி.சி.ரி.எம் பாடசாலை வீதி, இருபாலை/கி, கோப்பாய்), பாக்கியராசா அம்பிகைபாகன் (சாவற்காடு, ஆனைக் கோட்டை),பெரியான் இராசம்மா (புத்தூர் கிழக்கு), மாணிக்க வாசகர் புனிதவதி (புன்னாலைக்கட்டுவன் வடக்கு), தர்மினி செந்தூரன் (வேலணை மேற்கு). (202)

www.thaalee.com
www.jaffnatamilmatrimonys.com

45/1, Madampitiya Road, Colombo 15, Sri Lanka.

Phone : 2523127
E-mail : baakiya@yahoo.com
E-mail : thaalee@yahoo.com

**S. Sarma J.P.**
Astrologer
Managing Director

## மணமக்கள் தேவை

1) யாழ். இந்து கௌரவ குடும்பம், 26 வயது, மூல நட்சத்திரம், **London Citizen**, மாப்பிள்ளைக்கு, அழகான பெண் தேவை. மீன லக்னம் 7 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்று மொத்த கிரகபாவம் 28. **Profile No. 46**

2) யாழ். இந்து கௌரவ குடும்பம், 33 வயது, உத்தராடம் 3ஆம் பாதம், **Canada Citizen Engineer** மாப்பிள்ளைக்கு பெண் தேவை. விருச்சிக லக்னம், 2 இல் செவ் + ராகு, 7 இல் சனி உள்ளது. 3 சுற்று கிரகபாவம் 31. இவர் இன்னும் கல்யாணம் செய்யாதவர். ஆனால் கல்யாண எழுத்து எழுதி **Devorcee** பண்ணியவர். பெற்றோருடன் **Canada** வில் இருக்கிறார். **Profile No. 51**

3) யாழ். இந்து கௌரவ குடும்பம், உத்தரம் 1 பாதம், 27 வயது 1 இல் செவ்வாய் உள்ள **London PR** மாப்பிள்ளைக்கு 23 வயதிற்கு குறைந்த, அழகான, சிவந்த நிறமுள்ள பெண் தேவை. 3 சுற்று மொத்த கிரகபாவம் 49. **Profile No. 740**

4) யாழ். இந்து கௌரவ குடும்பம், அனுஷ நட்சத்திரம் 33 வயது, **UK PR** உள்ள **Doctor** மாப்பிள்ளைக்கு பெண் தேவை. மீன லக்னம் 9 இல் சந்திரன், செவ்வாய், சனி, 10 இல் சுக் கிரன் + ராகு. மொத்த கிரகபாவம் 17. **Profile No. 715**

5) யாழ், இந்து கௌரவ குடும்பம், திருவாதிரை நட்சத்திரம், 30 வயது, **Newzealand Citizen, Doctor** மாப்பிள்ளைக்கு பெண் தேவை. மிதுன லக்னம், 7 இல் சூரியன், 12 இல் செவ்வாய், 2 இல் சனி, 5 இல் சுக்கிரன் + ராகு உள்ளது. 3 சுற்று கிரகபாவம் 22. **Profile No. 791**

6) யாழ். இந்து கௌரவ குடும்பம், கார்த்திகை 4ஆம் பாதம், 32 வயது, **Australia PR** உள்ள **Engineer** மாப்பிள்ளைக்கு பெண் தேவை. கும்பலக்னம், 7 இல் சூரியன் + சுக்கிரன், 4 இல் சந்திரன், கேது உள்ளது. 3 சுற்று கிரகபாவம் 36. **Profile No. 948**

7) யாழ். இந்து கௌரவ குடும்பம், புனர்பூச நட்சத்திரம், 32 வயது, அழகான, **Bank Manager** மாப்பிள்ளைக்கு, அழகான படித்த பெண் தேவை. கன்னி லக்னம், 8 இல் செவ்வாய், 10 இல் சனி, சந்திரன், கேது உள்ளது. 3 சுற்று கிரகபாவம் 36. **Profile No. 948**

8) யாழ். இந்து கௌரவ குடும்பம், ரோகிணி நட்சத்திரம், 51 வயது, மிக அழகான சிவந்த, **Doctor** மாப்பிள்ளைக்கு, 30 இற்கும் 35 வயதிற்கும் இடையில் அழகான பெண் தேவை. படிப்பு, அந்தஸ்து முக்கியம் இல்லை. 3 சுற்று மொத்தக்கிரகபாவம் 33. **Profile No. 402**

9) யாழ். இந்து கௌரவ குடும்பம், 36 வயது, உத்தர நட்சத்திரம், **Norway PR** மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 3 சுற்று மொத்த கிரகபாவம் 39. தனு லக்னம், 9 இல் சந்திரன், கேது, செவ்வாய், புதன் உள்ளது. **Profile No. 115**

10) யாழ். இந்து கௌரவ, பூராட நட்சத்திரம், 34 வயது **Fair, Slim, CIMA Fully Qualified Accountant** பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. சிம்ம லக்னம், 12 இல் சூரியன் + வெள்ளி + கேது உள்ளது. 3 சுற்று மொத்த கிரகபாவம் 42. **Profile No. 184**

11) யாழ். இந்து கௌரவ குடும்பம், சித்திரை நட்சத்திரம், 4ஆம் பாதம், 34 வயது, **Teacher** பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 1 இல் சூரியன் + புதன் + கேது. 2 இல் செவ்வாய் உள்ளது. 3 சுற்று கிரகபாவம் 49. இப்பெண்ணிற்கு கொழும்பு வீடு + 20 லட்சம் சீதனம் உண்டு. **Profile No. 479**

12) கொழும்பு கௌரவ குடும்பம், **Roman Cathalic**, அவிட்ட நட்சத்திரம், 31 வயது, **Manager** பெண்ணிற்கு படித்த மாப்பிள்ளை தேவை. நிறைந்த சீதனம் உண்டு. 3 சுற்று மொத்த கிரகபாவம் 15. **Profile No. 259**

13) யாழ். இந்து கௌரவ குடும்பம், பூர நட்சத்திரம், 34 வயது, **BSc - Lecturer**, அழகிய, சிவந்த பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. இப் பெண்ணிற்கு கொழும்பில் வீடும் உட்பட 18 கோடி ரூபாவிற்கு மேல் சீதனம் உண்டு. செவ்வாய் குற்றம் இல்லை. 3 சுற்று கிரகபாவம் 14. **Profile No. 721**

மேலேயுள்ள மணமக்கள் சம்பந்தமான விவரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

## துர்க்கா திருமண மண்டபம்

மங்களகரமான சகல வைபவங்களுக்கும்

**சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**(ஆயிரம் பேர் அமரக்கூடிய மண்டபம்)**

உங்கள் வாழ்வின்
சகல மங்களகரமான நிகழ்வுகளுக்கும்
மற்றும் சுவையான உணவிற்கும் வெளியூர்
வைபவங்களை ஒட்டி நடைபெறும்
விருந்துபசார விழாவிற்கான
உணவிற்கும் முன்கூட்டியே எம்மிடம்
தொடர்புகொள்ளவும்.

**துர்க்கா தேவஸ்தானம்,**
**சாவகச்சேரி.**

(50649)(32-17-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இராமுப்பிள்ளை சிவராஜா**

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரும்
யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தரும்)

**தோற்றம்**
**02-01-1954**

**மறைவு**
**16-05-2005**

அமரத்துவம் எய்திவிட்ட எங்கள் இதயத் தெய்வமே!
ஆண்டு ஒன்றாகி விட்டதா? நம்பமுடியவில்லை
நீங்கள் கண்ட இன்பக் கனவு இனிய இல்லம்
'வசந்த மஹால்' என்று மிளிர்கின்றதே இன்று
எங்கள் சிரம்தாழ்த்தி இதனைத் தங்கள்
பாதக்கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்வதில்
சர்வ சந்தோஷமே.

"வசந்தமஹால்"
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(50742)(26-32-14-17)

உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## தொழில் பயிற்சியும் — வேலைவாய்ப்பும்

தனா மேன்பவர் பிரைவட் லிமிட்டட் - இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்டியுட் இரு நிறுவனங்களும் இணைந்து தொழில் பயிற்சி இல்லாதோருக்கும், தொழில் திறமை இல்லாதோருக்கும் - திறமையான தொழில் பயிற்சி வழங்கி உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கி வ்ருகின்றோம்.

<u>தொழில் பயிற்சி காலம் 1 மாதம் முதல் 6 மாதம் வரை:</u>

மேசன், சட்டரிங் கார்ப்பென்டர், பார்பென்டர், பிளம்பர், பைப்பிட்டர், A/C மெக்கேனிக், டக்ட் மெக்கேனிக், வெல்டர், எலெக்ட்ரோ மெக்கேனிக்கல் டெக்னீசியன், பெப்ரிகேட்டர், ஸ்கெப்போல்டர், இலெக்ட்ரீசியன்.

தொழில் பயிற்சி முடிந்தவுடன் உடனடி வேலைவாயுப்பு. சம்பளம் (20000) இருபதாயிரத்திற்கு மேல்.

பயிற்சியின் போது பொறியியளாளரின் வரை படம் பார்த்து ஆங்கிலம் மொழிபேசி சர்வதேச தரத்திற்கு நிகராக தொழில் புரிய பயிற்சி அளிக்கப்படும். அத்துடன் Saftey Kit - பாதுகாப்பு சாதனங்கள்வழங்கப்படும். பயிற்சியின் போது தேவைப்படுவோருக்கு உணவும், தங்கும் வசதி உண்டு.

இந்தியாவின் டாடா நிறுவனத்தின் உறுப்பு நிறுவனமான **Voltas** நிறுவனத்துடனும் லண்டனில் இயங்கிவரும் **City & Guilds** நிறுவனத்துடனும், இலங்கை அரசாங்கத்தின் நிறுவனமான **Vocational Training Authority** ஆகிய நிறுவனத்தினுடன் இணைந்து தொழில் பயிற்சி வழங்கி உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ் வழங்கி தொழில் பெற்றுக்கொடுக்கின்றோம்.

உடனே இணைந்து உங்களது எதிர்காலத்தை நல்ல தொழிலுடன் ஆரம்பியுங்கள்.

**செய்யும் தொழிலே தெய்வம் திறமை தான் நமது செல்வம்**

**இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியுட்**
**Industrial Training Institute (ITI)**

**571, சிலாபம் வீதி, கட்டுவ, நீர்கொழும்பு**

**தொ.பே. 031-4872869 / 077-3124787**

(Member of DANA Group)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றவர் மட்டில் கொள்ளும் கரிசனையே அன்பாகப் பரிணாமம் பெறுகின்றது

*பரிசுத்த பாப்பரசர் 16ஆம் பெனடிற்றின் முதல் திருமடலான 'கடவுளே அன்பாய் இருக்கிறார்' என்னும் மடலிலிருந்து ஒரு சிறு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.*

கடந்த காலங்களில் கிறிஸ்தவம் உடலை கீழ்த்தரமான ஒரு கண்ணோட்டத்தில் பார்த்துள்ளது என்று, தற்காலத்தில் கிறிஸ்தவத்தைப் பலர் விமர்சிப்பதுண்டு. இவ்வாறான போக்குகள் கிறிஸ்தவத்தில் இருந்துள்ளமை உண்மையே. எனினும் உடலை மிகவும் அதிகமாக உயர்த்திப் பேசுகின்ற தற்காலத்தின் போக்கு ஏமாற்றத்தைத் தரக்கூடியது. காமத்துடன் தொடர்புடைய உடல் அன்பு என்றால் பாலியலே என்ற தற்கால மனிதனின் போக்கு அன்பை வாங்கப்படுகின்ற அல்லது விற்கப்படுகின்ற ஒரு பொருளாக மாற்றிவிடுகிறது அல்லது மனிதனையே ஒரு பாவிக்கப்படுகின்ற பொருளாக மாற்றுகின்ற ஒரு நிலைக்கு இட்டுச்செல்கின்றது. இந்நிலையானது நாம் நம் உடலை பெருமைக்குரிய நிலைக்கு உயர்த்துகின்ற ஓர் நிலைப்பாடு அல்ல. மாறாக ஒருவன் தன்னுடைய உடலையும்பாலியலையும் தன்னுடைய சடப்பொருளின் ஒரு பகுதியாக மட்டுமே பார்த்து தான் விரும்பியவாறு தன் உடல் பாவிக்கப்படக்கூடியதும் துஷ்பிரயோகம் செய்யப்படகூடியதுமான ஒன்று என்று கருகின்றான். இன்னும் தன் உடலும் பாலியலும் தன்னுடைய சுந்திரத்தின் அடிப்படையில் பாவிக்கப்பட வேண்டும் என்று அவன் கருதாமல், அதை ஒருபொருளாக மாற்றி தான் விரும்பியபடி மகிழ்வாக இருக்க பாவிக்கப்படக்கூடிய ஒன்றாக கருகின்றான். இங்கே மனிதன் உண்மையாகத் தன்னுடைய உடலை தரம் குறைந்த விலைக்குத் தாழ்த்துகின்றான். இங்கே பாலியல் மனிதனுடைய இருப்பியல் சுதந்திரத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஒன்றாகவே அல்லது அவனது மனிதத்தின் முழுமையின் ஒரு வெளிப்படாகவோ காணப்படாது அவனுடைய உடல் சார்ந்த வற்றோடு மட்டும் தொடர்புடைஒன்றாகப் பார்க்கப்படுகிறது. இவ்வாறு உடலை அதிகம் உயர்த்தி மதிப்புக் கொடுத்துப் பேசுகின்ற தற்கால மனிதனின் போக்கு மிகவிரைவில் தன்னுடைய உடலைத் தன்மையை வெறுக் கின்ற நிலைக்கு அவனை மாற்றமுடியும். மறுபக்கத்தில் கிறிஸ்தவ விசுவாசம் வேற்று மையில் ஒற்றுமையை நிலைநிறுத்தியுள்ளது. அதாவது, ஒரு மனிதனில் ஆன்மாவும் உடலும் ஒன்றோடு ஒன்று இணைந்து ஊடறுக்கிறது. இவ்வாறாக உடலும் ஆன்மாவும் ஒன்றை ஒன்று புதியதொரு மேன்மை நிலைக்கு இட்டுச் செல்கிறது. உண்மையான அன்பு என்பது ஒரு மனிதனை இறைவனை நோக்கிய ஓர் பரவச நிலைக்கு இட்டுச்செல்கிறது. இதனை அடைய வேண்டுமென்றால் மனிதன் தன்னை மறுத்து, தன்னை தூய்மைப்படுத்தி, குணப்படுத்தவேண்டும்.

தூய்மையை நோக்கிய இந்தப் பாதை அதை உள்ளடக்கியுள்ளது? மனிதத்தன்மையுடைய, இறைத்தன்மையுடைய வாக்குறுதிகளை முழுமையாக உணர அன்பு எவ்வாறு வாழப்படவேண்டும்? பழைய ஏற்பாட்டில் ஞானிகளுக்கு மிகவும் தெரிந்த புத்தகமாகிய உன்னத சங்கீதங்கள் என்ற நூலில் இதற்கான விடை சுட்டிக் காட்டப்படுகிறது. தற்காலத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற விளக்கத்தின்படி இந்தப்புத்தகத்திலுள்ள கவிதைகள் யூத திருமண விழாக் களில் திருமண அன்பை புகழ்ந்து பேச பாவிக்கப்பட்ட அன்புப் பாடல்களாகும். இவ்வாறான சூழ்நிலையில் இந்தப் புத்தகத்தில் அன்பைக் குறிப்பதற்கு இரண்டு வித்தியாசமான சொற்கள் பாவிக்கப்படுகின்றன என்பதை கவனத்தில் எடுப்பது எமக்கு அறிவூட்டுவனவாகும். முதலாவதாக பன்மைத் தன்மையிலுள்ள டோடிம் என்ற சொல் அன்புக்காகப் பாவிக்கப்படுகிறது. இது பாதுகாப்பற்ற IAW நிலையிலுள்ள, தேடிக் கொண்டிருக்கின்ற அன்பைக் குறித்து நிற்கின்றது. பின்னர் டோடிம் என்ற சொல்லுக்குப் பதிலாக அகபா என்ற சொல் பாவிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும்போது இச் சொல்லின் சத்தத்தையுடைய இன்னுமொரு சொல்லாகிய அகாபே என்ற சொல் பாவிக்கப்படுகிறது. இச்சொல்லே வேதாகமம் அன்பைக் குறித்துக்கொண்டிருக்கின்ற தெளிவான கருத்தை குறிப்பதற்குப் பாவிக்

## ஞாயிறு நற்பிரசாதம்

கப்படுன்ற ஒரு பதமாக உருவெடுக்கிறது. ஐயுற்ற நிலையில் இருக்கின்ற, தேடிக் கொண்டிருக்கின்ற அன்போடு ஒப்பிடும் போது அகாபே என்னும் சொல் சுயநலப் போக்கிற்கு மேலாகச் சென்று மற்றவரைத் தேடி இனங்கண்டு பகிர்வதைக் குறிக்கின்றது.

எனவே, அன்பு என்பது ஒருவர் மற்றவர் மட்டில் கொண்டிருக்கின்ற அக்கறையும் கரிசனையும் ஆகும். இவ்வாறு அன்பு என்பது தன்னையே மகிழ்ச்சிப்படுத்துகின்ற ஒரு வெறியூட்டலில் மூழ்கியிருக்கின்ற ஒன்றல்ல அல்லது தன்னலத்தை நாடுகின்ற ஒன்று அல்ல; மாறாக அது அன்புக்குரியவரின் நன்மையையே தேடுகின்ற ஒன்று. இவ்வாறான தேடலில் அது தன்னையே மறுதலித்து மற்றவருக்காக தியாகம் செய்ய எப்பொழுதுமே ஆயத்தமாக இருக்கிறது.

*அருட்தந்தை ம.டேவிட்.*

## முதலாமாண்டு நினைவஞ்சலி



திருமதி

**சிவமணி கந்தையா**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)

திதி : அட்டமி 04.06.2006

ஞாயிற்றுக்கிழமை

மலர்வு 04-01-1944 | உதிர்வு 16-05-2005

அன்பும் பாசமும் அனைவருக்கும் காட்டி
பண்புக்கோர் இலக்கணமாய் இருந்தீர்
குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிர்ந்து
உற்ற துணையாய் உடனிருந்து காத்தீர்
இனிய நினைவுகள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் அன்பொளி மட்டும் அணையவில்லை.

இன்று (04.06.2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

*இல.56/24,*
*ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (50770)(32-17-15)

*தங்கள் நினைவில் வாடும்:*
**கணவர், உறவினர்.**

## நல்லாசிகள் உரித்தாகட்டும்



**கோண்டாவில்**
**நாதஸ்வர வித்துவான்**
**V.K.கானமூர்த்தி**
**அவர்கள் கலாபூஷணம் விருது பெற்றதையிட்டு**
**ஆசி கூறி வாழ்த்துகிறேன்.**

ச.ஸ்ரீசந்தவக்குருக்கள்,
பிரதமகுரு, நந்தாவில் அம்மன் தேவஸ்தானம். (சி/49514)(32-17-15)


## 60 Day's ENGLISH COURSE இலவச ஆங்கில பாடநெறி

- இலகுவில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு சிறந்தது ஒரு வழிகாட்டி ENGLISH LANGUAGE யின் தபால் மூலம் ஆங்கிலப் பாடநெறிகள்.
- Basic / Spoken English அடிப்படையில் இருந்தே கற்றுக் கொடுக்கப்படும். Diploma in English விரிவான தமிழ் விளக்கத்துடன் கூடிய பாடத்தொகுதி எமது பாடநெறியில் இனைந்து கொள்ள வயது கட்டுப்படு இல்லை பாடசாலை மற்றும் தொழில் புரிவோர் என யாவருக்கும் (இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்) இணைந்து கொள்ள முடியும்

**இலவசம்**

- இலவச Dialog GSM தொலைபேசி இணைப்பு
- இலவச 30 days English புத்தகம் மற்றும்
- இலவச அழகிய கைக்கடிகாரம் ஒன்றும் அடையாள அட்டை என்பன பாடநெறியில் இணையும் அனைத்து மாணவர்களுக்கு வழங்கப்படும் / பாடநெறிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது

மேலதிக விபரங்களுக்கு 5/- ரூபா பெறமதியான 3 முத்திரை அனுப்பி பெறவும்

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
**P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002**



## மலேசியா நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள மலேசியா மொழி கற்பித்தல்.

தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட் மலேசியா அரசாங்கத்தாலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தாலும் மலேசியா மொழியை கற்பிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மலேசியா நாட்டிற்கு விசா பெற விரும்பும் அனைவருக்கும் MLVK சான்றிதல் கட்டாயம் தேவை. கற்றுக்கொள்ள விரும்புவோர் உடனடியாக எங்களது காரியாலயத்தை தொடர்பு கொள்ளவும். தங்கி படிக்க விரும்புவோருக்கு தங்கும் வசதி சாப்பாடு வசதி உண்டு.

**தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட்.**
இல. 104, செட்டியார் தெரு, 2ம் மாடி, கொழும்பு - 11.
Tel : 011 - 5333346 / 7 / 8 / 9.

**தனா இன்டர்நெசனல் கல்வி நிலையம்.**
இல. 4, பம்பலப்பிட்டி டிரைவ்; பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.
Tel : 011 - 4510456 / 7

**இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்ட்டிட்டியு.**
இல. 571, கட்டுவ, சிலாபம் வீதி, நீர்கொழும்பு.
Tel : 031 - 4872869.



## உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான BBS இன் ஆங்கில பாட நெறிகளுக்கான விசேட வகுப்புக்கள்

**✱ COMMUNICATION SKILLS ✱ CERTIFICATE IN ENGLISH ✱ DIPLOMA IN ENGLISH**

**சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள் 5+ to 14+ சிறார்களுக்கு**

*BBS இன் யாழ்ப்பாணம் மற்றும் வளாகங்களில் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறும்*

- Pre-Foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

**IELTS** by Top Lecturer

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

- வயது 2+ முதல் வயது 3 வரை Play Group
- வயது 3+ முதல் வயது 4 வரை Montessori
- வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School

விசேட அம்சங்கள்

- ✱ ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
- ✱ தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
- ✱ பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
- ✱ முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

**BRITISH BUSINESS SCHOOL**

| | | | |
|---|---|---|---|
| இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | Dr.ஸ்ரீ பதமநாதன் இல்லம், மந்திகை, புலோலி. | இல:174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். |

HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL — Where Students Come First


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமாளை கண்ணனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள் அனைத்துக் கட்சி மாநாட்டில் குமரகுருபரன் கருத்து

கொழும்பு,ஜூன் 4

''காமாளை கண்ணனுக்கு கண்டதெல்லம் மஞ்சள்'' என்பது போல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இருப்பவர்கள் சமஷ்டி என்றவுடன் தனிநாடு என்று சிந்திக்கின்றனர். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தென்னிலங்கை கட்சிகளின் கருத்தை அறியமுன் அது விடயத்தில் ஆளுங்கட்சிக்குள் கருத்தொருமைப்பாடு ஏற்பட வேண்டும்.''

- இவ்வாறு கூறினார் மேலக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில், மேலக மக்கள் முன்னணியின் சார்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இந்தக் கூட்டத்தை ஆரம்பிக்கும் போதும், அனுப்பப்பட்ட அழைப்புகளிலும் அரசியல் தீர்வு சம்பந்தமாகவே பேச இருப்பதாகக் குறிப்பிடப்பட்டது - சொல்லப்பட்டது.

ஆனால், இங்கு இதுவரை பேசியவர்களில் பலரும் தமிழீழ விடுதலைப் புலிகளை விமர்சிப்பதிலும் அவர்கள் மீது தடை விதித்ததை ஆதரித்தும், அவர்களுடன் பேசக்கூடாதென்றும் - புலிகள் பேச்சுக்கு வரமாட்டார்கள் எனவும், புலிகளைத் திட்டினார்களே தவிர தீர்வு சம்பந்தமாக ஏதும் யோசனைகளை முன்வைக்கவில்லை. அவர்களைத் திட்டுவதனால் பயனில்லை. புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு வரலாறு உண்டு. மிதவாத தமிழ்த் தலைமைகள் காலங்காலமாக ஏமாற்றப்பட்டதனால்தான் இது ஏற்பட்டது.

மேலக மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை மட்டுமல்ல, சர்வதேச சமுதாயத்தை பொறுத்தவரை மட்டுமல்ல. ஏன் ஜனாதிபதி அவர்களே அறிவீர்கள் ஒரு முழுமையான சமஷ்டி அமைப்பு முறையின் கீழ்தான் தீர்வை எட்ட முடியும். அதனை அரசு முன்வைத்து பேசும்போது அமைச்சர் அதாவுல்லா முஸ்லிம்களினதும் அங்கு வாழும் சிங்களவர்களினதும் ஆதங்கம் பற்றியும் பேசலாம்.

ஆனால், வடக்கு - கிழக்கிற்கப்பால் வாழும் தமிழர்களுக்கும் அதேயளவு உரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால், உங்களுடன் அரசமைத்தவர்கள் சமஷ்டியை எதிர்க்கின்றார்களே.

''காமாளைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்'' என்பது போல உங்களுடன் இருப்பவர்கள் சமஷ்டி என்றால் தனிநாடு என்கிறார்கள். நோர்வே தனிநாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போகின்றது என்கிறார்கள். ஏன் அகாஷியும் கண்காணிப்புக் குழுவும்கூட புலி ஆதரவாளர்கள் என்கிறார்கள். கூட்டுத் தலைமை நாடுகள் புலியைத் தடைவிதித்தால் பாதகம். ஐ.நா.படை வரும் என்றால் எமது இறைமையைப் பாதிக்கும் என்கிறார்கள். அப்படியானால் இவர்களை வைத்துக்கொண்டு ஜனாதிபதியாகிய நீங்கள் எப்படி சமஷ்டி மூலம் தீர்வுகாணப் போகின்றீர்கள்? உங்கள் அரசியல் அனுபவத்தால் இக்கற்றுக்குட்டிகளுக்கு யதார்த்தத்தைப் படித்துக்கொடுங்கள். - என்று கூறினார் ந. குமரகுருபரன். (க)

## அடகு நகைகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,ஜூன் 4

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் உள்ள கிளைகளில் 31.12.2004 ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

நேற்று சனிக்கிழமை தொடக்கம் 3 தினங்களும் எதிர்வரும் 10 ஆம் திகதியும் ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் 11 ஆம் திகதி நெல்லியடிக் கிளையிலும் மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன. (202)

## அல்வாயில் மாதர் சங்கம் அங்குரார்ப்பணம்

கரவெட்டி,ஜூன் 4

அல்வாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அல்வாய் கிராம உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (70)

# யாழ்ப்பாணத்திலும் 'தருண அருண' பயிற்சி திங்களன்று செயலகத்தில் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன் 4

வேலையற்ற பட்டதாரிகளைத் தெரிவு செய்து பயிற்சியளிக்கும் 'தருண அருண' திட்டம் யாழ்.மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

திறன் விருத்தி, பகிரங்க தொழிற்பயிற்சி, மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் பி.எச்.ஜி.பிறேமசிறியுடன் தொடர்புகொண்டு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மேற்படி பயிற்சி தொடர்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இதன்படி, 2004 ஜனவரி அல்லது அதற்குப்பின் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தவர்களாகவும் 35 வயதுக்குக் குறைந்தவர்களாகவும் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் மேற்படி பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேற்படி அமைச்சினால் பயிற்சிக் காலத்தில் பயிற்சிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

மேற்படி 'தருண அருண' திட்டத்திற்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர், முகவரி விவரம் வருமாறு:-

கே.கௌசல்யா - (76, கனகரட்ணம் றோட், அரியாலை), எம்.சிவஜங்கரன் - (அராலி மத்தி, வட்டுக்கோட்டை), பி.மதியழகன் - (11/4,பூமகள் றோட், அரியாலை மேற்கு), ஆர்.சிவரஞ்சன் - (65/5, மாட்டின் றோட், யாழ்ப்பாணம்), பி.சுஜாதன் - (அல்லையம்பதி, துன்னாலை கரவெட்டி), கே.பிரியா - (பிரதான வீதி, காங்கேசன்துறை), பி.பகீரதன் - (நாவற்குழி மேற்கு, கைதடி), ஆர்.திரேஸ்வரி - (ஊரெழு மேற்கு, சுன்னாகம்), ரி.ஜெயவதனி - (மாசரி, வரணி), வி.கேதுராணி - (அருளகம், பெருந்தெரு புலோலி தெற்கு), பி.கஜேந்திரன் - (மாதகல் கிழக்கு, மாதகல்), கே.கார்த்திகா - (குளிந்தவேலி; கரணவாய் தெற்கு, கரவெட்டி), ஜி.நிரஞ்சன் - (தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி), ஆர்.சி.மேனகா - (கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கு), கே.சிவநிஷா - (புளியங்கூடல் வடக்கு), ஏ.பிரியதர்சினி - (சீனத்தர்பதி, நெல்லண்டை றோட்,தும்பளை), பி.பிறேமலதா - (சப்பச்சிமாவடி, சாவகச்சேரி), எம்.றீகன் - (16, குமார வீதி, நல்லூர்), என்.விதுசன் - (வசந்தபுரம் இளவாலை), ரி.பிரதீபன் - (தங்கஉடையார் லேன், பருத்தித்துறை), எஸ்.லோகேஸ்வரன் - (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), எஸ்.ஞானதீபன் - (குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு), எஸ்.சுவர்ணா - (பேரின்பவாசா வல்வெட்டி), கே.நித்தியகலா - (96, செட்டித்தெரு நல்லூர்), ஆர்.வித்தியா - (117, கண்டி வீதி, யாழ்.), ரி.லதா - (பலகாடு, காரைநகர்), ஏ.சசிகலா -(குப்பிளான் தெற்கு), எஸ்.மயூரதி - (கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு), கே.சிவகங்கா (495, கொழும்பகம் றோட்,யாழ்.) சுகிர்தன் அழகானந்தம் - (873, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.), ஏ.செந்தூரன் - (மயிலிட்டி வடக்கு) எம்.வானதி - (வாவறி, காங்கேசன்துறை) பி.அஜந்தா - (சந்தை வீதி, சுதுமலை வடக்கு) ரி.மிதிலா - (ஏழாலை மத்தி), வி.முகுந்தன் (413, நாவலர் வீதி, ஆனைப்பந்தி), எஸ்.ஜெசாந்தி - (117, கனகரட்ணம் வீதி, அரியாலை), என்.தசரதன் - (கணுக்கேணி மேற்கு முள்ளியவளை), என்.நிரோகினி - (90 செல்வபுரம், வவுனிக்குளம்).

# ஐக்கிய நாடுகள் சபையில் 194 ஆவது நாடாக தமிழீழம் இணையும் காலம் தூரத்தில் இல்லை

## சென்னை மாநாட்டில் கவிஞர் அறிவுமதி பேச்சு

ஐக்கிய நாடுகள் சபையில் 194ஆவது நாடாகத் தமிழீழம் இணைந்துகொள்ளும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழகக் கவிஞர் அறிவுமதி. கடந்த வியாழக்கிழமை சென்னையில் நடந்த ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் பண்பாட்டு விழுமியங்களை உணர்ந்தவர்கள். ஆழிப்பேரலையின்போதே அதை உறுதிசெய்தவர்கள். உலக நாடுகளில் எந்த இனத்தவர் கூடி மாநாடு நடத்தினாலும் வன்முறையில் முடியும். ஆனால், தமிழர்கள் அமைதி வழியில்தான் கூட்டங்களை நடத்தி முடிக்கின்றனர்.

இலங்கையில் வன்முறைகளால் படகுகளில் ஏறுகிற நம் உறவுகளின் உடைமைகள் இங்கே வருகின்றன. ஆனால் உடலீகள்...?

தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கரைபொதுங்குகிற ஈழத் தமிழரது பிணங்களை அடக்கம் செய்யவாவது கட்சித் தலைமையிடம் அனுமதி பெற்று அடிதடியின்றி வருவீர்களா?

ஐரோப்பிய ஒன்றியத்தின் நியாயமற்ற பக்கச்சார்பான தீர்மானத்தால் ஒருபுறம் வேதனையும் மறுபுறம் சினமும் அடைந்திருக்கும் புலம்பெயர் தமிழர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அவர்கள் தலைமையில் முன்னெடுக்கப்படும் தேச விடுதலைப் போராட்டத்துக்கும் முன்னைவிட இப்போது தீவரமான ஆதரவையும் பொருளாதார உதவிகளையும் அள்ளி வழங்கி இந்தத் தடைகளை முடியடிப்பார்கள் என்பது திண்ணம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கிறீர்கள். இங்கேயுள்ள சில ஊடகங்கள் விடுதலைப் புலிகளோடு மட்டும் பேசக்கூடாது. வேறு சிலரோடும் பேசவேண்டும் என்கிறார்கள்.

உங்கள் கருத்தை ஏற்கிறோம். யாரோடு பேச்சை நடத்தவேண்டும் என்று நீங்கள் ஈழத்தமிழர்களிடத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவுசெய்யுங்கள். கடந்த தேர்தலில் தலைவன் மௌனமாக இருந்ததன் உள் அர்த்தம் புரிந்து வாக்களிக்காமலேயே தீர்ப்பைச் சொன்னவர்கள் தமிழ் மக்கள். அவர்கள் தீர்ப்பளிப்பார்கள்.

ஒரு சிங்கள மருத்துவரான பிறை யன் செனிவிரட்னவே கூறுகிறார்.

தமிழீழம் என்பது ஈழத் தமிழர்கள் உருவாக்கியது அல்ல - சிங்கப் பேரினவாதிகள் உருவாக்கியது.

தமிழ்ப் புலிகள் பிரச்சினைக்குக் காரணமானவர்கள் அல்லர். பிரச்சினையைத் தீர்க்க முடியாததன் விளைவாகவே உருவானார்கள்.

100 இற்கு 90 வீதம் சிங்களவரை மட்டுமே கொண்ட இராணுவத்தின் கொடுமைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஆளான தமிழர்கள் இந்தக் கொடிய ஆட்சியிலிருந்து விடுதலைபெற விரும்புகிறார்கள்.

மீண்டும் போர் மூண்டாலும் பிரிட்டனும் மற்ற நாடுகளும் ஏராளமான ஆயுதங்களை விற்று ஆதாயமடைவார்கள். ஆனால், இலங்கையில் ஏற்படும் அழிவுக்கு யாரும் பதில் சொல்ல முடியாது என்கிறார்.

ஒரு விடுதலைப் போராட்டம் நடக்கும் காலத்தில் யார் பிரதிநிதி என்பதை அம்மக்களே முடிவுசெய்வார்கள். இன்னொரு நாடோ அல்லது வேறு சில நாடுகளோ முடிவுசெய்ய முடியாது.

தமிழர் பிரச்சினை குறித்து பேச்சில் கலந்துகொள்ளும் உரிமை விடுதலைப் புலிகளுக்கு உண்டா? இல்லையா? என்று ஈழத்திலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடத்தில் வாக்கெடுப்பு நடத்த ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் தயாரா?

60 ஆண்டுகாலம் ஒன்றுபட்ட இலங்கைக்குள் வாழ்ந்தவர்கள்தானே தமிழர்கள். அக்கொடுமையைத் தாங்காமல்தானே தனிநாட்டுக்காகப் போராடத் தொடங்கினார்கள்.

1990ஆம் ஆண்டுவரை யூகோஸ் லேவியா என்ற பெயரில் 6 நாடுகள் சேர்ந்திருந்தன. பின்னர் ஸ்லோவேனியா, குரோசியா, மசடோனியா, போஸ்னியா, ஹெஸ்கோவினா என ஒவ்வொன்றாகப் பிரிந்துபோயின. இறுதியாக மொண்டிநீக்ரோ மற்றும் சேர்பிய நாடுகள் இணைந்துஒரு கூட்டமைப்பாக விளங்கின. சேர்பியாவிடமிருந்து தனிநாடாகச் செல்ல மொண்டிநீக்ரோ விரும்பியது. மே மாதம் அம்மக்களிடத்தில் வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்டோர் சேர்பியாவிடமிருந்து பிரிந்துபோக வேண்டும் என்ற கருத்துக்கு வாக்களித்தனர்.

ஐ.நா.சபையில் 193ஆவது நாடாகா இடம் பெறப்போகிறது மொண்டிநீக்ரோ. அந்த நாட்டின் மக்கள் தொகையோ 6 லட்சத்து 50 ஆயிரம் பேர்தான்.

மொண்டிநீக்ரோ மக்களுக்குள்ள உரிமை ஈழத்தமிழர்களுக்குக் கிடையாதா? ஜனநாயக முறையில் அதைத் தெரிவுசெய்திருந்தால் விடுதலைப் புலிகள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்?

நீங்கள் ஈழத் தமிழரிடத்திலே வாக்கெடுப்பு நடத்துங்கள். ஐ.நா.சபையில் 194ஆவது நாடாக தமிழீழமும் இணையும் - என்றார் அறிவுமதி.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான கோ.க. மணி பேசுகையில்,

சிங்கள அரசுக்கு இந்திய அரசு எதுவித உதவியும் எந்த வகையிலும் செய்யக்கூடாது என்பதற்காக மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம். இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பாக இந்திய அரசு இருக்க வேண்டும் என்பதை எமது கட்சி தொடர்ந்து வலியுறுத்தும் - என்றார்.

தமிழ்நாடு முழுமைக்கும் ஈழத் தமிழர் பாதுகாப்புப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படவேண்டும் என்றும் மணி வலியுறுத்தினார்.

நீதிமன்றத் தடையினால் பேராசிரியர் சு.ப. வீரபாண்டியன் இக்கூட்டத்தில் உரையாற்றவில்லை. திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தனது நிறைவுரையில் தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினை அந்நாட்டுக்கு மட்டும் உரிய பிரச்சினை அல்ல. ஒவ்வொரு கண்டத்திலும் இப்பிரச்சினை விவாதிக்கப்படுகிறது. தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் உள்ள தமிழர்கள் இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

பிரிட்டன் நாடாளுமன்றம் முன்பு பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தற்போது குரலெழுப்பியுள்ளோம். அரசியல் சார்பற்ற எங்களுடன் இணைந்தோ, இணையாமலோ இப்பிரச்சினையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தரவேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினையில் தமிழக அரசுக்குக் கூடுதல் பொறுப்புள்ளது. பொடா சட்டத்தில் கைதான சு.ப.வீரபாண்டியன், பழ.நெடுமாறன் போன்றவர்களுக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டது. சட்டம் ரத்தான பின்பும் நிபந்தனை தொடர்கிறது. இதைக் களையத் தமிழக முதல்வர் கருணாநிதி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார் அவர்.

நிகழ்வின் முடிவில் ஈழத்த தமிழர் பாதுகாப்பு முழக்கங்களையும், இந்திய மற்றும் தமிழக அரசுக்கான கோரிக்கைகளையும் மேடையில் நின்றபடி கி.வீரமணி முழங்கிட அரங்கில் கூடியிருந்த தமிழின உணர்வாளர்கள் உணர்வெழுச்சியோடு ஒருமித்த குரலில் முழக்கங்களை எழுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

லான்சர் - 50 ஆங்கில எழுத்து மோட்டார் சைக்கிள், Sony T.V., Sony டெக், CD பிளையர், இரும்பு அலுமாரி, குளிர்சாதனப் பெட்டி, மீன்தொட்டி மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: (புதிய குறிஞ்சி மருந்தகம் அருகில்) இல.19, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-49503)

12 - xxxx தொடர் இலக்கமுடைய Daihatsu CAR லீசிங் வசதியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0773068775. (50781)

காவலுக்குரிய நாய்கள் மற்றும் பொமேரியன் நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. அத்துடன் NP GD xxxx தொடரிலக்கமுடைய ஓட்டோவும் (பட்டர் கலர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: பூம்பொழில் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி 0776170686. (50786)

நல்ல நிலையில் உள்ள Kingston 1 GB Flash Drive, Original பாவித்த மிகவும் நல்ல நிலையில் உள்ள Dell CD drive, பாவித்த Educatinal Software CD's, TV antana என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0713056757 (50724)

நல்ல நிலையிலுள்ள HH Model Bajai கலிபர் 15,000 km ஓடிய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. MD 90, Yamaha 90 மாற்றியும் கொடுக்கப்படும். T.P. 0779225603 (50775)

கொண்டா 50, சுப்பர்கப் மோட்டார் சைக்கிள், பன்சோனிக் T.V. T.C - 21 RG 20B, ஸ்ரான்ட் அன்ரனாவுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தாசன் 15/4, மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 0779596675 (50798)

குறுகிய காலம் பாவித்த CD Dawn மரூன் கலர் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. 795Km மட்டும் பாவித்தது தொடர்பு: 0777116132 (50800)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய குக்கஸ் பெயினர் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அல்பா மிக்ஷர், பாக்கஸ் லேன், மானிப்பாய். T.P.0777113867, 222 2887 (50744)

1½ மாதம் நிரம்பிய கிறேட்டேயன்குட்டி, 2 மாதம் நிரம்பிய நெப்போலியன்குட்டி, 8மாதம் நிரம்பிய ஆண் கிறேட்டேயன்குட்டி, 1½ மாதம் நிரம்பிய பொம்மேரியன் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K. Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.(50762)

Alsastian (பெண்) 1 வயது நிரம்பிய நாய் விற்பனைக்குண்டு. Greatdane (ஆண்) German shepherd (ஆண்) நாய்கள் குறைந்த கட்டணத்தில் Crossing இற்கு உண்டு. தொடர்பு: Prayash T.P.0773501011 (50852)

## கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு மாதம் நிரம்பிய Original Prima பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் பாம் சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (சி-49535)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 05.06.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம்- திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்றர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49444)

## வீடு வாடகைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 5 வீடுகளைக் கொண்ட தொடர்மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. (தனியார் நிறுவனங்களிற்கு உகந்தது) தொடர்பு: இல.06, பிறவுண்வீதி, 2ஆம் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். T.P. 8024, 0776540092, 0779921889. (50690)

சகல வசதிகளும் கொண்ட இரண்டு அறை வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: இல.53, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (சி-49534)

பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையில் நான்கு படுக்கை அறைகளுடனும், இரண்டு குளியலறைகள் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: திருமதி சிவஞானம், இல.06, பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். T.P. 8024, 0776540092, 0779921889, (குடும்பம் or தனியார் நிறுவனம் விரும்பத்தக்கது). (50692)

## வீடு வாடகைக்கு தேவை

மாத வாடகை 3000 தொடக்கம் 4000இற்குள் (முற்பணம் 50,000) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: 0773501011 (50776)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/49481)

## மணமகள் தேவை

அமெரிக்காவில் நிரந்தர வசிப்பிடம், இந்து கௌரவ, 45 வயதுடைய பாதுகாப்பு உத்தியோகத்தர் அச்சுவினி நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற 8 பாவம் உடைய மணமகனுக்கு ஏழு/பதின்மூன்று வயது வித்தியாசமுள்ள மணமகள் தேவை. தொடர்பு: எஸ்.சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (50746)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1966 அச்சுவினி, பட்டதாரி, அரச பாடசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரிய மணமகளுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர். தகுந்த சீதனம் உண்டு. முதல் கடிதத்திலேயே சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 2878,மே/பா உதயன். (50790)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978, 2இல் செவ்வாய், பட்டதாரி அரச சேவை ரூபா 50,000/- மேல் மாத வருமானம் உள்ள மணமகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றார்கள். Vegetarian விரும்பத்தக்கது. முதல் கடிதத்திலேயே சகல விவரங்களுடனும் தொடர்புகொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 2879, மே/பா உதயன். (50791)

2 வது புதிய பிரிவு...

**Computer Hardware**
**Free Workshop**

**ஒரு வார கால முழுநேர இலவச கற்கைநெறி**

உங்களுக்காக 100% செய்முறைப் பயிற்சியினுடனான ஒரு வார குறுகிய கால Hardware கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

**ஆரம்பம்: 05.06.2006 காலை 11.00 மணி**

- Assembling
- Upgrading
- Troubleshooting
- Repairing
- Software Installation

அனுமதிக் கட்டணம் மட்டும்!

ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக இக் கற்கைநெறி அமைகின்றது.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வு கூடத்தில் அதிநவீன கணினிகளில் செய்முறைகள் வழங்கப்படும்.

இதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலேயே தொழில்சார் வசதிகள் வழங்கப்படும்.

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

**பதிவுகளுக்கு முந்துங்கள்!**

## காணவில்லை



படத்தில் காணப்படும் எனது கணவர் பிரம்மஸ்ரீ வை.வெங்கடகிருஷ்ணசர்மா (குட்டிஐயா) கடந்த 26ஆம் திகதி மாலை கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் பூசைக்காக சென்றவர் இன்று வரை வீட்டுக்கு திரும்பிவரவில்லை. இதுவரையும் எவ்விதமான தகவலும் கிடைக்காமையால் நானும் எனது நான்கு பெண் குழந்தைகளும் மிகவும் வேதனையடைந்துள்ளோம். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி வெ.மாலினி (மனைவி)
(50851) கோப்பாய் மத்தி,கோப்பாய்.T.P. 077 9583912

## ஆறாம் ஆண்டு நினைவு கூரல்



திருமதி கந்தசாமி தையல்நாயகி
(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)
திதி: 04.06.2006

ஆண்டுகள் ஆறு கடந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது

தங்கள் பிரிவால் துயருறும்:
திருஞானசம்பந்தர் குடும்பத்தினர்.

புலவனார் வீதி, கல்வியங்காடு.
(50783) (39.21.19.14)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி கல்லூரிக்கு பின்புறமாக 3½ பரப்புக் காணியுடன் 4 அறைகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 785, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 9615, 222 2696 (சி/49513)

நுணாவில், பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கில் யுத்த அனர்த்த பாதிப்பு எதுவும் ஏற்படாத நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும். T.P. 0776568166, 0779885531. (50787)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பணிக்கர் ஒழுங்கையில் 2 பரப்பும் 0.58 குளியும் சுற்றிவர மதிலுள்ள காணி விற்பனைக்குண்டு. விலை 28 லட்சம் ரூபா. காணியை பார்வையிட்டு விலையை பேசித தீர்மானிக்கலாம். தொடர்பு: க.நமநாதன், 72/27, பணிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி. (50780)

## திருமண சேவை

ஆயிரம் பொய் சொல்லியும திருமணமா? இப்படி மொழிக்குச் சற்றும் உடந்தையில்லாதவர் உங்கள் வேல் அமுதன்!!.... உண்மைகளை மாத்திரம் சொல்லித் திருமணங்களை ஆற்றுப்படுத்துபவர். (சுயதெரிவுமுறை முன்னோடி) தசாப்த விழாக்கண்ட புகழ்பூத்த மூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்ப சிட்டியூர் மாயலூர் வேல் அமுதன்!! விவரங்களுக்குத் திங்கள், புதன், வெள்ளி நாள்களில் மாலை 4.30 - 8.30மணி வரையுள்ள நேர காலத்தில் தொடர்புகொள்க. வேல் அமுதனின் கொழும்புT.P. 2360488, 4514396, 0602158067 (சி-49479)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ பெற்றோர் தமது 34 வயதுடைய, ஆங்கிலப் பயிற்சிபெற்ற, மிருகசீரிடம் நட்சத்திரம், செவ்வாய்க்குற்ற மற்ற, 18 பாவம் உடைய மகளுக்கு 41 வயதிற்கு உட்பட்ட அரசாங்கம்/ வங்கி/கூட்டுத்தாபனம்/பட்டதாரி ஆசிரியர் போன்ற மணமகனை தேடுகின்றார்கள் தொடர்பு: சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (50747)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1982ஆம் ஆண்டு, உத்தரம் முதலாம் பாதம், மீன இலக்கினம், 4இல் ராகு, 6இல் சந்திரன் 7இல் சூரியன், புதன், சனி, சுக்கிரன், 8 இல குரு, 9இல் செவ்வாய், 10இல் கேது London B.Sc. (Hons) தொழில்புரியும் London பிரஜாவுரிமை உடைய மணமகளுக்கு பெற்றோர் Engineer/ Accountant மணமகனை எதிர்பார்க்கின்றனர். குடும்பவிவரம், ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். A.T. ஜெயசிங்கம், No.8, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (50768)

## வாடகைக்கு/விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 8 அறைகள் , 5 குளியல் அறைகள் , 2 சமையல் அறைகள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் கொண்ட இரண்டு மாடிக்கட்டடம் (2500 சதுர அடி) வாடகைக்கு/ விற்பனைக்குண்டு.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மட்டும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 021 222 9195 (50661)

## மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

06.06.2006 - 10.06.2006
(4நாள்கள் மட்டும்)

முன்கூட்டியே பதிவு செய்யவும்

இளைஞர்களே!

* சக்தி குறைவு * ஞாபக மறதி * பயம் * நடுக்கம் * நித்திரைக்குறைவு * ஆண்மைக்குறைவு * நீரிழிவுநோய்

*என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?*

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மை சக்திக் குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதிநேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P**
A.S.N.சுற்றுலா விடுதி, 392/A, மணிக்கூண்டு வீதி,யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்)
Govt.Regd.No.9492
Hot Line 0777 569205, T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-49530)

## மரண அறிவித்தல்

**செல்லையா செல்லத்துரை**

*(பொன்னுத்துரை)*



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லையா செல்லத்துரை 02.06.2006 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் (பூவம்மா, கனடா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா, கந்தையா மற்றும் இராசரத்தினம் (கொழும்பு), சபாரத்தினம் (லண்டன்), காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் இரத்தினம்மா (கனடா), கண்மணி (புத்தளம்), பரமேஸ்வரி (கோண்டாவில்) ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் ரஞ்சினி (கனடா), கலாநிதி (கோண்டாவில்), சிவரூபன் (பிரான்ஸ்), கலைச்செல்வி (கனடா), கலையரசி (கனடா) ஆகியோ ரின் அருமைத் தந்தையும் சிவசுப்பிரமணியம் (கனடா), அற்புதராசா (ஓமேக்ஸ் எலக்றிக்கல்ஸ் உரிமையாளர், கோண்டாவில்), சூரியப்பெருமாள் (கனடா), செல்வக்குமார் (கனடா), நவநீதம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் சர்மிளா (கனடா), சுஜிவினி (கனடா), அனித்தா (கனடா), ரஜீவன் (கனடா), ரசிகரன் (யாழ்.பல்கலைக் கழகம், விஞ்ஞானபீட 2 ஆம் வருடம்), ரஜிந்தன் (A/L 2006 கொக்குவில் இந்துக் கல்லூரி), கீர்த்தனா (தரம்-7, யா/இந்து மகளிர் கல்லூரி), நிஹசன் (கனடா), நிவேதா (கனடா), கௌதம் (கனடா), சபீன் (கனடா), அபிலாஷ் (பிரான்ஸ்), அபிரா (பிரான்ஸ்), அபிஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
அற்புதராசா ( மருமகன்).

*வன்னியசிங்கம் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
T.P.:021 4590982

(50794) (39.21.19.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த

**ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்**
**வாழும் கலைப் பயிற்சி**
**இலவச அறிமுக உரை**

நாளை (05.06.2006) திங்கட்கிழமை மாலை 5 மணி
கம்பன் கோட்டம்,
நல்லூர் பின்வீதி, நல்லூர்.

பயிற்சிநாள்கள்: 06.06.2006 முதல் 11.06.2006 வரை
பயிற்சி நேரம்: காலை 6 மணிமுதல் 8.30 மணிவரை
அல்லது மாலை 4 மணிமுதல் 6.30 மணிவரை
அன்பில் உணருங்கள்! உங்களை உணருங்கள்!.

0779059544, 0777157281, 0779749346

(50856) (24.11.14.26)

# கண்ணீர் அஞ்சலி



## தேவசகாயம் அன்னராசசிங்கம்

(இ.மி.பா.சே நிலையம், இ.மி.ச.பருத்தித்துறை)

கடந்த 01-06-2006 அன்று கடமை நேரத்தில் அகால மரணத்தைத் தழுவிக்கொண்ட எங்கள் இனிய நண்பனும் சக உறுப்பினருமான அன்னராசசிங்கம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகளுக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்மா இறைபதமெய்திட ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் வாடும்:
மின் அத்தியட்சகர், ஊழியர்கள்
மி.பா.சே நிலையம் இ.மி.ச.

பருத்தித்துறை.
(50862)(26.11.15)

# மரண அறிவித்தல்



திருமதி
## சரஸ்வதி லோகநாதன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் ENFIELD LONDON ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி லோகநாதன் அவர்கள் 31.05.2006 அன்று LONDON இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.லோகநாதனின் அன்பு மனைவியும் நிமலன் (ENFIELD), தயாளன் (CLAYHALL), விமலோதினி (HEMEL HAMPSTEAD), நந்தினி (AUSTRALIA), சபேசன்(READING) ஆகியோரின் அன்புத் தாயும் வதனா, ஜோதி, ஸ்ரீனிவாசன், அரசரட்ணம், ஸ்ரீரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியும் நிஷா, நிலோஷன் (MARY), அனீட்டா, கஜன், மால், கிருத்திக்கா, அபிஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சி.நகேந்திரன், சி.இளையதம்பி, சி.தம்பிராஜா, சுகிர்தரட்ணம், மார்க்கண்டு பூபதி, தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக இன்று (04-06-2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை (INDIAN FUNERAL SERVICE HALL, LONDON N.11) இல் வைக்கப்பட்டு, நண்பகல் 12.15 மணிக்கு (GOLDERS GREEN) மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
M.கிரிதரன் (பெறாமகன்),
6/1 B, Layarcls Road,
Colombo-04
T.P.: 2508873

தொடர்புகளுக்கு:
நிமலன் - 0044 02083633340
தயாளன் -0044 02085501783

(சி/49533)(26.11.15)


**ராஜா** யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
**பட்டியல்**
புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம் பீட்டர் ஜக்சனின்
**கிங் - கொங் King Kong**
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30

**இந்தியாவில் கல்வி பயிலுங்கள்**
**பிருந்தாவன் கல்லூரி**
பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

Pre University
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com

A/L 2 பாடங்கள் OR A/L முடிவுகளை எதிர்பார்த்திருப்போர்

கற்கை நெறிகள் ஜூன், ஜூலை மாதங்களில் ஆரம்பமாகும்

Company Secretarial Services (Pvt) Ltd.
285 c-1/1, Stanley Tillakaratne Mw, Nugegoda.
For Details - Tel : 0777-317043


## அரச ஊழியர் போட்டிக்கு அதிகளவான ஆக்கங்கள்

அரச ஊழியர்களின் வினைத்திறமைகளை மேம்படுத்தும் பொருட்டு கலாசார அமைச்சினால் இந்த வருடம் நடத்தப்படும் போட்டிகளுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து அதிக எண்ணிக்கையிலான அரச ஊழியர்கள் தமது ஆக்கங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பாடசாலைகளில் சமையல் கூடங்கள்

வடமராட்சி,ஜூன்4

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்திலுள்ள 17 பாடசாலைகளுக்கு உலக தரிசனம் (வேல்ட்விசன்) நிறுவனம் சமையல் கூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இப்பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் காலை நேர உணவாக சோறு மற்றும் சோயா மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப்பண்டங்கள் உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருகிறது. காலை நேர உணவினை தயாரிப்பதற்கு வசதியாகவே சமையல் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

(173)

## வடமராட்சி பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,ஜூன்4

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கென 18 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா நிதியை கல்வி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந் நிதி வடமராட்சி வலயத்திற்குட்பட்ட 78பாடசாலைகளுக்கும் மாணவர்களின் தொகை, மாணவர்களின் கல்வி அடைவுமட்டம்,கல்விச்செயற்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பகிர்ந்து அளிக்கப்படும்.

வலயப் பணிப்பாளரின் அனுமதியுடன் இதற்கான திட்டங்களை வகுத்து நிதியை செலவு செய்ய வேண்டும் என பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (173)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி யோகேஸ்வரி வைத்திலிங்கம்

புதுவிளாங்குளம், மாங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் மீசாலை மேற்கு, மீசாலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யோகேஸ்வரி வைத்திலிங்கம் 03-06-2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் நல்லம்மா (நல்லம்), சிவபாக்கியம் (செல்லம்), குலராஜசிங்கம் (ராசன்), சிவகுமாரி (பேபி-ஜேர்மனி), குணசேகரம் (பாலன்), கதிர்காமநாதன் (ஆறுமுகம்), சறோஜா (ராணி), காலஞ்சென்ற சிறிதங்கராசா (சிறி), தவராஜசிங்கம் (தவம் -கனடா), செல்வராஜா (செல்வன்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-06-2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களா றோட்,
சிதம்பரி கடையடி,
மீசாலை மேற்கு, மீசாலை.
(சி/49540)(26.11.15)

தகவல்:
மருமகன்-கரன் குடும்பத்தினர்,
தொ.பே.077 3618498,
077 6997710

## திருமதி பரமேஸ்வரி துரைசிங்கம்



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி துரைசிங்கம் நேற்று (03-06-2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தயாநிதி மற்றும் கமலராஜன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஆசிரியை) மற்றும் தனபாலசிங்கம் (குடிவரவு, குடியகல்வு திணைக்களம்), பாலச்சந்திரன் (நிலஅளவையாளர், புத்தளம்), தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரகுமாரின்(ஜேர்மனி) அன்பு மாமியும் கீர்த்தனா, துவாரகா, தாரகா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-06-2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒருமணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகமூர்த்தி கோயில் வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(50859)(26.11.15)

தகவல்:
து.கமலராஜன்
(கமல்-மகன்).

# எப்போது காண்போம் இனி...?



## அமரர் இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

(பிரபல தொழில் அதிபரும், ஆர்.வி.ஜி.பீடிக் கம்பனி, மருந்தகம் ஆகியவற்றின் உரிமையாளரும்)

மலர்வு 28.08.1932 — உதிர்வு 01.06.2006

வல்வெட்டித்துறை மண் ஈன்றெடுத்த வள்ளல்!
வீரமனிக்கும் முத்துமாரி அம்மனின் தொண்டன்!
அல்லலால் தவிக்கும் ஆருயிருக்கு அருளாளன்!
ஆர்.வி.ஜி.நிறுவனத்தின் உயரிய அச்சாணி!
நல்லவர் இதயங்களில் நடமாடும் தெய்வம்!
நானிலத்தில் பலபேர்க்கும் வாழ்வளித்த நல்லான்!
இவ்வுலகில் எழுபத்துநான்கு அகவையை நிறைத்தே
ஈசனடி இணைந்த துயர் எமையின்று வாட்டும்!
ஏழைகள் வாழ்வுபெறத் தொழில் தந்த அன்பன்!
ஈடில்லாத் தாபனத்தை இயக்கிநின்ற பெரியோன்!
நாளும் பல அரியபணித் தருமத்தால் உயர்ந்தோன்!
நமைப்பிரிந்து சென்றது ஏன்? விதிதானோ அறியோம்!
பெறற்கரிய தலைவா உன் பெரும்நினைவே நிலைக்கும்!
பிறப்பெடுத்து மீண்டிடுக! பெருந்துன்பம் நீங்க!
*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆர்.வி.ஜி.பீடி நிறுவனம்,
ஆர்.வி.ஜி. மருந்தக ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச் சூழலை சுத்திகரிப்போர் அவதானமாகச் செயற்படவேண்டும்

## வெண்புறா நிறுவனம் அறிவுறுத்தல்

வட்டக்கச்சி, ஜூன்4

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு சிரமதானப் பணியிலும் சுற்றுச் சூழல் சுத்திகரிப்பிலும் ஈடுபடுவோர் வெடிபொருள் அபாய த்தைக் கருத்தில்கொண்டு செயற்படவேண்டுமென கிளிநொச்சி வெண்புறா நிறுவனத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

உலக சுற்றுச் சூழல் தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத்தினத்தை முன்னிட்டு மனிதநேயப் பணிகளில் ஆர்வமுடையோர் சுற்றுச் சூழல் சுத்திகரிப்பு போன்ற சிரமதானப் பணிகளில் ஈடுபடமுனைவர்.

இவ்வாறான சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள் ஆபத்துக் குறித்து அவதானமாகச் செயற்படவேண்டும்.

நிலத்தில் மறைந்துகிடக்கும் வெடிபொருள்களால் ஆபத்து நேரிடலாம் அது மட்டுமன்றி குப்பை கூழங்களை எடுக்கும் போதும் குழி வெட்டிப் புதைக்கும் போதும் அவற்றில் வெடிபொருள்கள் இருந்து வெடிக்கலாம் எனவே சந்தேகத்துக்கிடமான இடங்களில் இருந்து கழிவுகளை அகற்றும் போது அவதானமாகச் செயற்படவேண்டும் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (405)

# கப்பல் மூலம் குடாநாட்டுக்கு சிமெந்து

வடமராட்சி, ஜூன்4

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் 2 ஆயிரம் பை சிமெந்து நேற்று எடுத்து வரப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு எடுத்துவரப்பட்டுள்ள சிமெந்து பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்டது.

ஏ 9 பாதையூடாக சிமெந்து எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு கடந்த வாரம் தடைவிதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (173)

# தேட்டம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன்4

செயல்திறன் அரங்க இயக்கமும் கைதடி நாவற்குழி தெற்கு மகளிர் குழுவும் இணைந்து நடத்தும் 'தேட்டம்' கலை விளையாட்டுத் திடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு கைதடி நாவற்குழி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் வசந்தாதேவி கலந்துகொள்வார். பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், கிராமியப் போட்டிகள், கரகம், கூத்து, நடனம், நாடகம் என்பன இடம்பெறும்.

போராலும் இராணுவ நெருக்குவாரங்களாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆற்றுப் படுத்தல் பணியாக இந்தச் செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்றது.

# அறநெறிப் பாடசாலை திறப்பு விழா

வட்டக்கச்சி, ஜூன்4

கிளிநொச்சி இராமநாதபுரம் மாவடி ஸ்ரீமாரி அம்பாள் ஆலய அறநெறிப்பாடசாலைத் திறப்பு விழா இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.தர்மசூரியர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன், கிளிநொச்சி திருநெறிக்கழகத் தலைவர் வே. மகாலிங்கம் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (405)

BITSMANS கல்வி நிறுவனம் மானிப்பாய்
பிரிவு 2
O/L DAY CLASS
(எமது Super Grade ஆசிரியர் குழு)
கணித, விஞ்ஞான பாடங்கள் வாராந்தம் 10 மணித்தியாலங்கள் நடைபெறும்.
ஆரம்பம்: 05.06.2006
திங்கள் 8.00 a.m.

## மிருசுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்தனர் என்றும் -

உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு வலயத்தில் குடியிருப்புகள் அற்ற படையினரின் முன்னரங்க நிலைகளின் பிற்பகுதியில் இத்தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

## பிரிட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சமாதானத்தை உருவாக்கவேண்டும் என்று இப்போராட்டத்தின் முடிவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தை கேட்டுக்கொள்ள உள்ளோம்.

எமது போராட்டத்துக்கு தமிழ் மக்கள் பிரம்மாண்டமான ஆதரவை தொலைபேசி மற்றும் மின் அஞ்சல்களினூடாக நாளாந்தம் தெரிவித்து வருகின்றனர்

- என்று தயா இடைக் காடர் கூறினார்.

## தடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் அவர் பொலீஸ் நிலையத்தில் இருந்து தப்பி ஓடி விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட இளைஞருக்கு காவலாக இருந்தவரான பொலீஸ் கான்ஸ்டபிள் உடனடியாக தற்காலிக வேலை நீக்கம் செய்ய பிரதிப் பொலீஸ் மா அதிபர் நிஹால் கருணாரத்தின உத்தரவிட்டுள்ளார். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

# விடுதலை வித்துக்கள் தினமாக ஜூன் ஐந்தை ஈ.பி.டி.பி. பிரகடனம்

கொழும்பு, ஜூன்4

தியாகி பொன். சிவகுமாரனின் நினைவு தினமான ஜூன் 5ஆம் திகதியை விடுதலை வித்துகள் தினமாகப் பிரகடனஞ் செய்துள்ளதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி.) அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரலாற்றில் மறைக்கமுடியாத தியாகத்தின் சின்னமான பொன். சிவகுமாரன் உயிர் நீத்த ஜூன் 5ஆம் திகதியை ஈ.பி.டி.பியினராகிய நாம் விடுதலை வித்துக்கள் தினமெனப் பிரகடனஞ்செய்துள்ளோம்.

தியாகி பொன். சிவகுமாரனின் கொள்கைகள், கருத்துக்கள் அவரது மக்கள்நேசிப்புகள் நமது மக்களுக்காக விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையான எதிர்காலத்தை கட்டியெழுப்பக்கூடிய வல்லமையாக கொண்டிருந்தன. சொந்த மக்களை விடுதலைப் போராட்டம் என்ற பெயரிலே அடக்கி ஒடுக்குவதையும் படுகொலை செய்வதையும் இலக்காகக் கொண்டிருந்தவரல்ல தியாகி பொன். சிவகுமாரன். அந்தத் தியாகி காட்டித் தந்த வழியில் தமிழ்த்தேசிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்குமானால் நமது மக்கள் இன்று சுதந்திரமிக்க மக்களாக தலைநிமிர்ந்து நின்றிருப்பர்.

நமது மக்களின் உரிமைக்கான போராட்டம் திசைமாறி மீண்டும் யுத்தம் எனும் கொடிய அரக்கனை நமது மக்கள் வாழ்வின் மீது திணிக்கும் இச்சந்தர்ப்பத்தில் உண்மையான மக்கள் விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த தியாகி பொன். சிவகுமாரனையும் அவர் வழியில் உயிர்நீத்த ஆயிரமாயிரம் உயிர்களையும் நாம் கௌரவிப்போம் அவர்களுக்கு எமது அஞ்சலிகளை செலுத்துவோம்.

ஜூன் 5ஆம் திகதி முதல் வித்து விதைக்கப்பட்ட தினம். இத்தினத்தை மக்கள் உணர்வின் தினமாக விடுதலை வித்துக்கள் தினமாக பரந்துபட்ட வகையில் இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் அனுஷ்டிக்குமாறு வேண்டுகிறோம்.

மக்கள் சமுக நிறுவனங்கள், சக இயக்கங்கள், அரசியல் கட்சிகள் இத்தினத்திற்கு முழு ஆதரவைத்தருமாறு வேண்டுகிறோம். விடுதலை வித்துக்கள் தினமான ஜூன் 5ஆம் திகதியில் இதயவீணை வானொலியில் ஈ.பி. டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா நமது முதற்தியாகி பொன். சிவகுமாரன் பற்றியும் விடுதலை வித்துக்கள் தினம் பற்றியும் சிறப்பு உரை ஆற்றவுள்ளார்.

என்றுமே எமது மக்களின் மனங்களில் இருந்து அகற்ற முடியாத பொன். சிவகுமாரனின் நினைவுகளை மக்களாகிய நாம் கௌரவிப்பதன் ஊடாக அதனை நினைவு கூருவதன் மூலம் நமக்கான சரியான போராட்ட வழிமுறையை அடையாளப்படுத்துவோம் என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

# இறந்த சிறுவன் பெயரில் பணம் திரட்டும் மோசடி

யாழ்ப்பாணம், ஜூன்4

நோயால் இறந்த சிறுவனின் பெயரில் சிகிச்சைக்கென பணம் சேகரிக்கும் முயற்சியில் மோசடிக் குழுவொன்று ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த இரு மாதங்களுக்குமுன் இரத்தச் சோகை நோயினால் பீடிக்கப்பட்ட பூநகரியைச் சேர்ந்த ராஜ்மோகன் யதுஷன் என்ற நான்கரை வயதுச் சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

எனினும், அச்சிறுவன் சிகிச்சை பயனளிக்காது கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி உயிரிழந்தார்.

தற்போது அதே சிறுவனின் பெயரில் அதே நோய்க்குச் சிகிச்சையளிக்க என ஒரு மோசடிக் குழு பணம் சேர்த்துவருகிறது. இக்குழு வடமராட்சிப் பகுதியில் பணம் சேர்த்துள்ளது என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

## அரசு மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இடம் பெறுகின்றனர்,

அரச குழுவும் இன்றிரவு ஒஸ்லோ புறப்படுகின்றது. அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பாலித ஹோகன்ன தலைமையில் செல்லும் அரசுத் தரப்புக் குழுவில் சமாதானச் செயலக கொள்கை வகுப்புப் பணிப்பாளர் சானக்க ஜெயசேகர, சட்டவல்லுநர் கொமின் தயாசிறி ஆகியோர் இடம்பெறுகின்றனர். இக்குழுவில் மேலும் ஒருவர் இடம்பெறுவார் என்று கூறப்படுகின்றது. அவரது பெயர் விவரம் இன்று வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு செய்யவேண்டும் என்று நோர்வே பிரதமர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தடை அறிவிப்பை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட பின்னர் நோர்வே தரப்பிலிருந்து வெளிவந்துள்ள உயர்மட்டக் கருத்து இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழினப்படுகொலையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர். பிரிட்டன் சென்றுள்ள யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

'இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்கள் எப்போது கடத்தப்படுவோம்; கொல்லப்படுவோம் என்பது தெரியாத அச்ச நிலையில் வாழ்கின்றனர். கொல்லப்படுபவர்கள் கூட ஏன் கொல்லப்படுகிறோம் என்று தெரியாத பயங்கர சூழ்நிலையில் உள்ளனர். தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட நடத்தப்படும் போராட்டம் தமிழ் மக்களுக்கு ஆறுதலைத் தரும்'

- இவ்வாறு திருமதி பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. நிகழ்வில் உரையாற்றுகையில் குறிப் பிட்டார்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அங்கு தொடர்ந்து திரண்டுவருகின்றனர் என்றும்-

தமிழர்களது நிலைம்ம மற்றும் நிலைப்பாடுகள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியபடி அவர்கள் போராட்டத்திற்கு ஆதரவளித்து வருகின்றனர் என்றும் -

பிரிட்டனில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

லண்டன் நேரப்படி நேற்றுமுன்தினம் ஆரம்பமான 101 மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நிறைவடையும்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் முன்பாக உண்ணாவிரதம் இருப்பதற்கான இடத்தை ஒதுக்கித்தந்துள்ள பிரிட்டிஷ் அரசு போராட்டம் நடத்த அனுமதியும் வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அறிவிப்பு வெளிவந்துள்ள நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்துள்ள பிரிட்டனில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக - இலங்கை அரசைக் கண்டித்து - உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இதனை முன்னுதாரணமாகக் கொண்டு புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில் இத்தகைய கவனஈர்ப்புப் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டு வருகின்றனர் என்று வெளிநாட்டுத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

"இறுதி வெற்றிக்கு வழிவிட்டு விலகுக" என்ற தலைப்பில் சர்வதேச பிரகடனமும் இந் நிகழ்வில் வெளியிடப்படவுள்ளது.

தலைவர் வே.பிரபாகரனின் படத்தைத் தாங்கிய தமிழீழத் தேருக்கு முடி சூட்டும் நிகழ்வும் இங்கு இடம்பெறவுள்ளது.



விசேட சலுகை
எப்பிரதேசத்திலும் வீட்டில் இருந்தவாறு உரையாடக் கூடிய முறையில் டயலொக், மொபிரெல் மேசைத்தொலைபேசிகள் பைக்கேச் இணைப்புக்களுடன் குறைந்த செலவில் பொருத்தித் தரப்படும்.
* மொபிரெல் 800/-, டயலொக் 500/- பைக்கேச்சுகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
* உத்தரவாதம் உண்டு
* அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகள், அதற்கான உதிரிப்பாகங்கள் விற்பனையும், பழுது பார்த்தலும்.
* சகல விதமான கையடக்கத் தொலைபேசிகளும் Un Lock செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
நியூ பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி,
205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773- 518330
077- 6660289.
(50220) (39)

Group Class CHEMISTRY
விரும்பிய அலகுகளை A/L 2007 & 2008 மாணவர்கள் கற்கலாம்
தொடர்புகளுக்கு:-
NEW SCIENCE CENTRE
By: அன்பழகன்

A/L 07,08
புதிய பிரிவுகள் ஆரம்பம்
TAM:- குழந்தை
LOG:- கமல்
H.C.:- ஜெயக்குமார்
GEO.:- பாபு
P.Sc.:- பொன். சந்துரு
ECO.:- விக்கி
B.ST.:- ரமேசு
ACC.:- சயந்தன்
DRA.:- பிரபல ஆசிரியர்
* தனிப்பாட அனுமதிகள்.
* அமைதியான பாதுகாப்பான சூழலில் வகுப்புகள்.
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

SKY COMPUTERS (PVT) LTD.
Affiliated with Irish International University (U.K)
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 ; Fax: 021 - 4590325
Microsoft Office 2 Month
Desktop Publishing 3 Month
Computerized Accounting 3 Month
Hardware Technology 2 Month
Kids Program (சிறுவர்களுக்கான பயிற்சி நெறி)
Internet & E-mail 2Weeks (1000/=)
தமிழ்மொழியிலும் கற்பிக்கப்படும்
Computer sales
Computer Repair
Computer Parts
Computer Maintanance
E - mail : skycom@WOW.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

மக்கள் வங்கியின் வாழ்த்துகள்

மக்கள் வங்கியின் பாதுகாப்பு அத்தியட்சகராகக் கடந்த 25 வருடங்களாகக் கடமையாற்றி ஊழியர்கள் மத்தியிலும் வாடிக்கையாளர்கள் மத்தியிலும் பெரும் நன்மதிப்பைப் பெற்று தனது 55 ஆவது பிறந்தி தினமான இன்று (04.06.2006) இல் இளைப்பாறிச் செல்லும் வேலுப்பிள்ளை விக்னேஸ்வரன் அவர்களுக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய பெரும் சேவையினையும் பாராட்டி அவர் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.
சுன்னாகம் மக்கள் வங்கி ஊழியர்களும், அவருடன் பணியாற்றிய ஊழியர்களும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறு[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org